# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 22 சனிக்கிழமை (06-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:41


# சுயநிர்ணய உரிமை ஒன்றே தமிழ் மக்களின் அபிலாஷை!

## அதை ஒரே குரலில் உலகுக்கு ஒலிக்கச் செய்ய யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் தயாராகின்றது

யாழ்ப்பாணம்,ஜனவரி6

**"சுயநிர்ணய உரிமை தங்களுக்கு உள்ளது. அதை வென்றெடுப்பதே தமது அபிலாஷை என ஈழத் தமிழர்கள் கருதுகின்றார்கள். அதனை சர்வதேச உலகுக்கு ஒரே குரலில் எடுத்துச் சொல்வோம்."**

**- இவ்வாறு கூட்டாகப் பிரகடனம் செய்திருக்கின்றது யாழ்.பல்கலைக்கழகச் சமூகம்.**

நேற்று யாழ்.பல்கலைக்கழகச் சமூகத்தின் பல தரப்புப் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட பத்திரிகையாளர் மாநாட்டில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

ஈழத் தமிழ் மக்களின் அபிலாஷையை ஒன்றாக வெளிப்படுத்துவதற்கான எழுச்சி நிகழ்வுகள் குடா நாடு எங்கும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் விளக்க

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் படையினர் தாக்குதல்

கொழும்பு,ஜன.6

நேற்று முன்தினம் காலை ஓமந்தைக்கு வடக்கே மருதமடு பகுதியில் படையினர் கொமாண்டோ பாணியிலான தாக்குதல் நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

துருப்பினர் தமது நிலையில் இருந்து இரு கிலோமீற்றர் தூரம் முன்னேறி இத்தாக்குதலை நடத்தியதாகவும் - இதில் புலிகள் தரப்பில் ஏழுபேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

## சுமுக நிலை ஏற்பட்டதை அடுத்து
## விஞ்ஞான பீட மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்

யாழ்ப்பாணம்,ஜன.6

'ராகிங்' சம்பவம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் இடைநிறுத்தம் செய்யப்பட்டதை அடுத்து விஞ்ஞானபீட மாணவர்கள் நடத்தி வந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று சுமுகமாக முடிவுக்கு வந்தது.

தமது போராட்டத்தைக்கைவிட்டு விஞ்ஞானபீட மாணவர்கள் நேற்றுப் பிற்பகல் விரிவுரைகளுக்குச் சென்றனர்.

விஞ்ஞானபீட சிரேஷ்ட மாணவர்களுக்கும் புதிய மாணவனான ஷாஜகானுக்கும் இடையே நிலவிவந்த கசப்புணர்வுக்கு சுமுகத் தீர்வு காணப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை ஒழிப்போம்! யுத்தம் தொடரும்
## மட்டக்களப்பில் படையினர் ஒலிபெருக்கி மூலம் பிரசாரம்

மட்டக்களப்பு,ஜன.6

மட்டக்களப்பு நகரில் நேற்றுப் படையினர் ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் அழிக்கும் வரை யுத்தம் தொடரும் என்று இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனத்தில் நகரில் வலம்வந்த படையினர் தனித் தமிழில் இந்த அறிவிப்பை விடுத்தனர்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்தை ஏற்கமாட்டோம். புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடரும். எனவே உங்கள் பிள்ளைகளை புலிகளுடன் இணைய அனுமதிக்காதீர்கள் என்று அந்த அறிவிப்பு மூலம் படையினர் கோரிக்கை விடுத்தனர். (ஐ-3-21)

## புலிகளின் யுத்த நிறுத்தத்தை அரசுத் தரப்பு நிராகரித்தது!
### நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

கொழும்பு,ஜன.6

விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தை, அரசாங்கம் நேற்று நிராகரித்தது.

நேற்றுக் காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தை அடுத்து நேற்றிரவு இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அரசின் இந்த முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

'அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காகத் தகவல் திணைக்களத்தில் நேற்றிரவு இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா இது தொடர்பான விவரங்களை வெளியிட்டார்.

அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற - அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவை அறிவிக்கும் - முதலாவது செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக அமுல் செய்துள்ள யுத்த நிறுத்தம் தொடர்பாக மூன்றாம் தரப்பான நோர்வே மூலமோ அல்லது வேறு ஒரு நாடு மூலமோ எமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. 'தமிழ் நெற்' மூலமே புலிகளின் அறிவிப்பை நாங்கள் தெரிந்து கொண்டோம்.

புலிகளின் இந்த யுத்தநிறுத்தத்தை ஏற்க நாம் தயாரில்லை.

பலவீனமடைந்துள்ள தமது படையணிகளை ஒன்று திரட்டுவதற்காகவே புலிகள் யுத்த நிறுத்தம் செய்துள்ளனர். அத்துடன் நீண்ட கால யுத்தம் ஒன்றுக்குத் தம்மைத் தயார்படுத்தவும் புலிகள் இதைப் பயன்படுத்துவர். யுத்தநிறுத்தம் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் ஏற்கனவே விளக்கமாக தெரிவித்துள்ளார். அந்த நிலைப்பாட்டையே அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் - என்று அமைச்சர் தெரிவித்தார். (ஐ-3-6)

## பேச்சுத் தொடர்பாக புலிகள் இன்னும் முறைப்படி தமக்கு அறிவிக்கவில்லையாம்!
### அமைச்சர் பிரியதர்சன யாப்பா கூறுகிறார்

கொழும்பு,ஜன.6

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக உத்தியோகபூர்வமான அழைப்பு எதுவும் விடுதலைப் புலிகளிடம் இருந்து இன்னமும் அரசுக்குக் கிடைக்கவில்லை என்று ஊடகத்துறை அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான அழைப்பை அரசாங்கம் விடுத்துள்ளது. எனினும் புலிகளிடம் இருந்து உத்தியோகபூர்வமான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

பேச்சுக்களை ஆரம்பிப்பதில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரத்து 250 பயணிகளுடன் 'லங்கா முடித்த' புறப்பட்டது
### 49 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஜன.6

காங்கேசன்துறையில் இருந்து ஆயிரத்து 250 பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் நேற்றுப் பிற்பகல் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

வடமராட்சியில் இருந்து அழைத்து வரப்பட்ட 400 பேரும் -

யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட 850 பேரும் - இந்தக் கப்பலில் செல்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டிருந்தவர்களில் 49 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதேவேளை -

இக் கப்பல் திருகோணமலையில் இருந்து இன்று ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு மீண்டும் யாழ்.வரவுள்ளது. பின்னர் அடுத்த வாரம் இங்கிருந்து மேலும் ஒரு தொகுதி பயணிகளை திருமலைக்கு அழைத்துச் செல்லவும் ஏற்பாடாகி உள்ளது. (ஐ-3)

## பயண விண்ணப்ப படிவங்கள் செயலகங்களிலும் பெற வசதி

யாழ்ப்பாணம்,ஜன.6

வெளிமாவட்டங்களுக்குச் செல்பவர்கள் பயண அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை இனிமேல் பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படிவங்கள் தற்போது படை முகாம்களிலேயே வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் படிவங்களைப் பெறுவதில் பொதுமக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் தொடர்பாக சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த வசதி செய்யப்படவுள்ளது.

பிரதேச செயலகங்கள் தமது பகுதிக்குத் தேவையான படிவங்களைத் தம்மிடம் பெற்றுச் சென்று பொதுமக்களுக்கு வழங்கலாம் என்று யாழ்.சிவில் நிர்வாக அதிகாரி யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி யாழ்.அரச அதிபரின் ஏற்பாட்டில் இந்தப் படிவங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச செயலகங்களுக்கு விரைவில் வழங்கப்பட உள்ளன. (ஐ-3)

## கிரனேட் வீச்சு

கொழும்பு,ஜன.6

கொடிகாமம் பகுதியில் உள்ள படையினரின் காவல் நிலை ஒன்றின் மீது கடந்த புதனன்று இரவு கிரனேட் வீசப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதில் காயமடைந்த சிப்பாய் ஒருவர் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பயணப் பதிவுகள் வடமராட்சியில் நிறுத்தம்

வடமராட்சி,ஜன.6

வடமராட்சியில் இருந்து பயணிகளை கப்பலுக்கு அழைத்துச் செல்லும் பணி நேற்றுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அறிவித்துள்ளது.

வடமராட்சியைச் சேர்ந்த பயணிகள் இனிமேல் தமது பயணப்பதிவு மற்றும் பணிகளை யாழ்ப்பாணத்தில் மணியம் கட்டடத்தில் உள்ள பணிமனையிலேயே மேற்கொண்டு அங்கிருந்தே பயணம் செய்யமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் அமெ. தூதருடன் சந்திப்பு

கொழும்பு,ஜன.6

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரிடம் பதினொரு தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரியுள்ளன.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதர் அல்ஸி வெல்ஸை அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்த கட்சிகளின் பிரதிநிதிகள் பல மணி நேரம் கலந்துரையாடினர். வடக்கில் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், அவலங்கள் தொடர்பாக தூதருக்கு விளக்கிக் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்துக்குப் பதிலாக அரசாங்கமும் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளவும், விடுதலைப் புலிகளுடன் அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் - அமெரிக்கா இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்க்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

A/L 2003

கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்

இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பம்

The Express Institute

Irupalai, Kopay.

(82607)

யங்றோயல்ஸ்

சயன் அக்கடமி

நெல்லியடி

வடமராட்சி மாணவர்க்காக

கலை, வர்த்தகப் பிரிவு

A/L 2001, 2002

2001 DAY CLASS

2003

தமிழ் - செல்வி பங்கயம்

இ.நாகரிகம் - செல்வி சுதாமதி

இ.சமயம் - செல்வி சுதாமதி

பொருளியல் - திரு. விக்கி

திரு. M.C. சுதாகரன்

கணக்கியல் - திரு. நவா,

திரு. சத்த

அளவையியல் - திரு. தர்மதேவா

ஏனைய சகல பாடங்களும்.

10.01.2001க்கு முன் பதிவு செய்யவும். (82601)

IBMS இன் புலமைப்பரிசில் 2001

மேற்படி புலமைப்பரிசிலிற்கான தெரிவுப் பரீட்சை (பொது அறிவு, நுண்ணறிவு) 09.01.2001 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்கள்

1. யாழ். இந்துக் கல்லூரி
2. யாழ். மத்திய கல்லூரி
3. யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
4. கொக்குவில் இந்துக் கல்லூரி
5. வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி.

மேலதிக விவரம் நாளைய உதயனில்

IBMS No.701, K.K.S. Road, Jaffna. Tele: 021 - 3165

C(4665)

முக்கிய அறிவித்தல்

DMI - யாழ்நகர்

அனைத்து வகுப்புகளும் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள நிறுவனத்தில் நடைபெறும்.

மாணவர்கள் பலாலி வீதியூடாக சமுகம் தரவும். -நிர்வாகி.

(82582)

லஷ்சுமி சினிமா

இணுவில்

அஜித், (இரு வேடங்கள்) சிம்ரன் நடித்த

வாலி

(தினம்) காட்சிகள் 10.30, 2.30 (பகல்)

பொங்கல் வெளியீடு:-

வானத்தைப்போல

(82624)

# வீரத் தமிழ்மகன், தியாகத் திருமகன்



## அமரர் குமார் பொன்னம்பலம்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்

தலைவர் : திரு. அ. குமாரவேல் (ஆசிரியர்)

காலம் : ஞாயிற்றுக்கிழமை 07.01.2001 மாலை 3.30 மணி

இடம் : வெஸ்ரா பணிமனை குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

தியாகத்தைத் தீரத்தைப் போற்றுவோம்

அணி திரள்வீர்!

(82616)

# நான்காவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



## செல்வன் விஜயபாலா விதுஷன்

லாலாசோப் உரிமையாளர் விஜயபாலா-குமாரினி

தம்பதிகளின் செல்வப் புதல்வன் விதுஷன்

இன்று (06. 01. 2001) சனிக்கிழமை தனது நான்காவது பிறந்தநாளை அச்சுவேலியில் உள்ள வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பப்பா (வன்னியசிங்கம் - லாலாசோப் உரிமையாளர்), அப்பம்மா மனோன்மணி, ஜேர்மனியில் வசிக்கும் சித்தப்பா, விஜயராஜ், மாமிமார், ஊரில் வசிக்கும் சித்தப்பாமார், சுப்பிரமணியம் அப்பப்பா, வன்னியில் வசிக்கும் அம்மையா, அம்மம்மா, பெரியப்பாமார், மச்சாள்மார், மச்சான்மார், அண்ணாமார், அக்காமார், சித்திமார், நவரெத்தினம் பாரியார், மல்லிகா மற்றும் எமது ஸ்தாபன ஊழியர்கள், நிக்ஷன் பல்பொருள் வாணிப உரிமையாளரும் பாரியாரும் செல்வரத்தினமும் வேணி களஞ்சிய உரிமையாளரும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆஞ்சநேயரின் அருளால் பல்கலையும் கற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

லாலாசோப் உரிமையாளர்,

அச்சுவேலி. (C/14461)

நாகம்ஸ்

சுன்னாகம்

டைட்டானிக்

(தமிழ் - தினம்)

டைட்டானிக் என்ற கப்பலுக்கு நடந்த பயங்கரம்.

இது ஓர் உண்மைச் சம்பவம். இது ஓர் உண்மையான காதல் சம்பவம்.

உலகில் உள்ள எந்தச் சக்திகளாலும் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது. (82619)

காட்சி நேரங்களில் மாற்றம்.

புதிய நேரம்: 10.30, பி.ப. 2.30.

எரிக்கனேஸ் மூக்குக் கண்ணாடி அகம், பல்கட்டுதல்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 2486

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2567.

ராஜா யாழ்ப்பாணம்

கடைசி வாரமாக

விஜய், மோனிக்கா, ரம்பா, மணிவண்ணன்

மற்றும் பலரின்

வித்தியாசமான நடிப்பில்

மின்சாரக்கண்ணா

காட்சிகள்: 10.30, 2.00 (பி.ப.)

அடுத்த வெளியீடு:

பார்த்தேன் ரசித்தேன்

(C/14587)

# மரண அறிவித்தல்கள்

## செபமாலை யோசெப்

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை யோசெப் 04.01.2001 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் தேவமனோகரன் (லண்டன்), செல்வி தேவமதி (ஆசிரியர் - யா/குளமங்கால் றோ.க.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், அன்னம்மா, பரிபூரணம், திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.01.2001) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் மாகியப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். (82622)

தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி அருணாசலம் சரஸ்வதி

காளுவன் சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி அருணாசலம் சரஸ்வதி அவர்கள் நேற்று (05.01.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் வள்ளியம்மை (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணி, இந்திராதேவி, ரங்கநாதன், பிருந்தாதேவி, ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தவராசா மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், கோகிலா, ரமணன், ராகவன், சரவணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-01-2001) முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளுவன், சுழிபுரம். (82621)

தகவல்:- பிருந்தாதேவி (மகள்)

# நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

| 29ஆம் நாள் | 45ஆம் நாள் |
| --- | --- |
| அன்னை மடியில் 22 - 01 - 1952 / ஆண்டவன் அடியில் 09 - 12 - 2000 | அன்னை மடியில் 09 - 04 - 1954 / ஆண்டவன் அடியில் 23 - 11 - 2000 |



திருமதி சத்தியசீலதேவன் நகுலேஸ்வரி



திருமதி சூரியகுமாரன் இரத்தினேஸ்வரி

பாசமதைப் பந்தத்தால் சூழ்ந்து நின்று பரமனடி சேர்வதிலும் பங்கு கொண்டு
நேசமுடை சோதரிகள் நீவிர் என்றும் நிமலனவன்பதம் சேர்ந்து பெறுக சாந்தி!
தேசமதில் தேன்மலர்ந்த மலர்கள் ஆனீர் தேம்பியழ எம்மவரை விட்டகன்றீர்
ஈசனவன் இணையடியின் இன்பங்கண்டு இன்பமுடை பெருவாழ்வில் பெறுக சாந்தி!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

நெஞ்சுருக நினைந்திருக்கும் குடும்பத்தினர். (82528)

# உதயன்

## தட்டிக்கேட்க ஆளில்லையெனில்...

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதி ஒருவர் மர்மமாகக் கொலை செய்யப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது. சக கைதிகளாலேயே இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

பிந்துனுவெவத் தடுப்பு முகாமில் தமிழ்க்கைதிகள் கொன்று குவிக்கப்பட்ட பின்னர், தென்னிலங்கைச் சிறைச்சாலைகளில் உள்ள தமிழ்க் கைதிகளை வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறைகளுக்கு மாற்ற வேண்டும் என்று ஒரு கோரிக்கை பலமாக ஒலித்தது. ஆனால் அது வெறும் கோரிக்கையாகவே அமுங்கிப் போயிற்று.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் எங்கு வாழ்ந்தாலும் பாதுகாப்பில்லை. தங்கள் சொந்தப் பிரதேசமான வடக்கு — கிழக்கிலும் சரி, மலையகத்திலும் சரி, தென்னிலங்கையின் ஏனைய இடங்களிலும் சரி, எல்லாப் பகுதிகளிலுமே தமிழர்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு இல்லை

தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள், சிறுபான்மையினர், தமது உரிமைகளைக் கேட்பவர்கள், அவற்றுக்காகப் போராடுபவர்கள் ஆகையால் அவர்களின் உயிர்கள் குறித்து அக்கறை கொள்ளத் தேவையில்லை என்ற எண்ணம் அரசாங்க இயந்திரத்தின் மனதில் நீண்ட காலமாகப் பதிந்துவிட்டது.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அவர்களின் உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக, அவர்களை அடக்கு முறைக்கு உட்படுத்துவதும் அழிப்பதுமே கொழும்பு அரசுகளின் உள்நோக்கம் என்று கருதுமளவுக்கு —

1983 ஆம் ஆண்டுக்குப் பிந்திய தமிழருக்கு எதிரான, விரோதமான பல சம்பவங்கள் இந்நாட்டில் நடந்துள்ளன. சட்டங்களைக் கேடயங்களாக்கி தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் கொடுமைகள் ஒரு புறமிருக்க, சட்டத்துக்கு மாறான அநியாயங்களும், கொடுமைகளும், மனித உரிமை மீறல்களும் தாராளமாக நடைபெற்று வருகின்றன.

சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் முழுப் பாதுகாப்புக்கும் அரசாங்கமே பொறுப்பு என்பது சர்வதேச நியதி; ஆனால் மேற்கூறப்பட்ட இடங்களில் தமிழர் படுகொலைகள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. அவற்றைத் தடுக்கக் கடந்த பதினேழு வருடங்களாக உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை; அதனையே ஆண்டு ஆரம்பத்தில் நடைபெற்ற சிறைப்படுகொலை சுட்டி நிற்கிறது.

கொழும்பு அரசாங்க இயந்திரமும், ஆட்சியாளர்களும் தமிழர்களின் உயிர்களை துச்சமென மதிக்கிறார்கள் என்பதற்குப் பதின்மூன்று வருடங்களாக அடிக்கடி நடைபெற்று வரும் தமிழ்ச் சிறைக் கைதிகளின் படுகொலைகள் உகந்த ஆதாரம்.

தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட்டு, அவர்களும் இந்த நாட்டின் முதலாந்தரப் பிரஜைகள், பெரும்பான்மையினருக்குச் சமமான பிரஜைகள் என்ற நிலை உருவாக்கப்படும் வரை —

தமிழ் மக்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலையே தொடரும்.

படுகொலைகள் நடைபெறும் போது தடுப்பு நடவடிக்கை எடுக்கப்போவதாக அரசாங்கம் அவ்வப்போது கூறிக்கொள்வதும் — காட்டிக் கொள்வதும் வழக்கமாகுமே அன்றி, ஆக்கபூர்வமாக எதுவும் நடைபெறாது. தட்டிக்கேட்க எவருமில்லை என்றால்......!

## ஒளிவிழா

மாவியம்பதி புனித செபஸ்ரியார் ஆலய வருடாந்த ஒளிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்றலில் பங்குத் தந்தை அருட்திரு. ஜெயரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இளவாலை மறைக்கோட்டத்தில் நடைபெற்ற நாடகப் போட்டிகளில் முதலிடம் பெற்ற 'அன்று சிந்திய ரத்தம்' என்னும் நாடகமும் அரங்கேற்றப்படும். (ஐ-6)

## ஓட்டோ தடம் புரண்டது

யாழ்ப்பாணம், ஜன. 6

ஓட்டோ தடம் புரண்டதில ஓட்டோச் சாரதி காயமடைந்தார்.

பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் வசிக்கும் குணரத்தினம் திருமாறன் (வயது 26) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15-10)

## சமுர்த்தி செயலணிக் கூட்டம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே—136 கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்திச் செயலணி அமைக்கும் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவாலி தெற்குப் பகுதியில் இடம் பெறும்.

ஜே—141 கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்திச் செயலணி அமைக்கும் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சண்டிலிப்பாய் வடக்கு பகுதியில் நடைபெறும். (ம-185)

* * *

வண்ணார்பண்ணைஜே-82 கிராம அலுவலர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணி அமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில்நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், திட்டமிடல் அலுவலர் க. மகேஸ்வரன், சமுர்த்தி முகாமையாளர் தி. யோகேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-5)

## சுவரொட்டி கண்காட்சி

யாழ். வை. எம். சி. ஏயினால் அண்மையில் நடத்தப்பட்ட சமாதானத்துக்கான சுவரொட்டிப் போட்டியின் சுவரொட்டிகளின் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு யாழ். வை. எம். சி.-ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுவரொட்டிப் போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவமும் பிற்பகல் 1.30 மணிக்கு அங்கு நடைபெறும். (ஐ-10)

## நாளை

மார்கழி 23

ஞாயிற்றுக்கிழமை

திதி: துவாதசி

முற்பகல் 9. 01 வரை.

நட்சத்திரம்: ரோகிணி

முன்னிரவு 7 .59 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 9.32 — 11.02

ராகுகாலம் 5.02 — 6.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# குடாநாட்டில் பனை மரங்களின் எண்ணிக்கை விவரம் சேகரிப்பு

வலிகாமம் தெற்கு, ஜன. 6

பனை அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை வகுக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் செயலகத்தின் திட்டமிடல் பிரிவினரால் குடாநாட்டில் உள்ள பனைமரங்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலர் பிரிவுகளூடாகக் கிராமசேவையாளர் பிரிவு ரீதியாகச் சமுர்த்தி அலுவலர்கள் மூலம் பனை மரங்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

வருட எண்ணிக்கைப் பிரிவுகளின்படி தற்போது உள்ள பனை மரங்கள், கடந்த 5 ஆண்டுகளுக்குள் தறிக்கப்பட்ட பனைமரங்கள் போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி அலுவலர்களால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின்படி 59 ஆயிரத்து 45 பனை மரங்கள் தற்போது உள்ளன என்றும், கடந்த ஐந்து ஆண்டுகளில் இப்பகுதியில் இருந்து 4 ஆயிரத்து 114 பனை மரங்கள் வெட்டப்பட்டுள்ளன என்றும் தெரியவந்துள்ளது. (ஐ-152)

## வகுப்புகள் 15 ஆம் திகதி ஆரம்பம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதலாம் வருட மாணவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதேவேளை —

கலாசாலை பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களை உடனடியாக அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் இணையம் ஏற்பாடு செய்துள்ள 'சமாதானத்தை வலியுறுத்தி மக்கள் எழுச்சியை வெளிப்படுத்துதல்' தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் 'பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்படும் நிகழ்வில் ஒன்றிணைந்து செயற்படல்' மற்றும் இணைந்த பங்களிப்பை வழங்குதல், என்பன பற்றி ஆராயப்படவுள்ளதால் அரச சார்பற்ற நிறுவனங்கள், மனிதநேய அமைப்புக்கள், சமய நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள்விடுத்துள்ளது. (ஐ-10)

## கடத்தப்பட்ட மாணவன் கொழும்பில் விடுவிப்பு

கொழும்பு, ஜன. 6

கல்முனை காரைதீவுப் பகுதியில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவன் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் வைத்து விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முகமட் தம்பி சப்ராத் (வயது 21) என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

இவர் கல்முனையில் இருந்து சாய்ந்தமருதுப் பகுதிக்குத் தனது காரில் சென்று கொண்டிருந்த போது காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் பகுதியில் வைத்து இடைமறித்த சிலரினால் காருடன் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

கடத்திச் சென்ற நபர்கள் இவரைக் காருடன் கொழும்பில் விடுதலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் என்ன காரணத்திற்காக யாரால் கடத்தி வரப்பட்டார் என்பது குறித்து தெரியவில்லை. (ஐ)

## ஆங்கிலப்படிப்பு வட்டத்தின் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 6

அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட ஆங்கிலப் படிப்புகள் வட்டத்தின் முதலாவது கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது

''பூலோக மயமாதலும் அதன் நிலைமையின் கீழ் ஆங்கிலம் கற்பித்தலும்'' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெறும்.

தொடக்க உரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழங்குவார்.

தொடர்ந்து கருத்துரைகளும் கலந்துரையாடலும் இடம்பெறும். (ஐ)

## அதிபர்களை சமுகமளிக்கக் கோரிக்கை

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அறநிதியத்தில் உதவி பெறவிருக்கும் யாழ். வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் பெயர், விவரங்களை சமர்ப்பித்த பாடசாலைகளின் அதிபர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கையம்மன் அன்னபூரணி மண்டபத்துக்குச் சமுகம் கொடுக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

உதவி பெறவிருக்கும் மாணவர்களையும் அழைத்துச் செல்லுமாறும் அவர் அதிபர்களைக் கேட்டுள்ளார். (ஐ-10)

### உதயவாக்கு

அறிவாளியின் ஒருநாள் வாழ்வு முட்டாளின் முழுநாள் வாழ்வுக்குச் சமம்.

— ராஜாஜி

## கடந்த ஆண்டு இரு தரப்பிலும் 4 ஆயிரம் பேர் உயிரிழப்பு!

### இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜன. 6

யுத்தத்தின் காரணமாக கடந்த ஆண்டு இரு தரப்பிலும் 4 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் வரை படையினர் தரப்பில் 1,464 பேரும், புலிகள் தரப்பில் 2,433 பேரும் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 18 வருட காலத்தில் போர் காரணமாக மொத்தம் 64 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் இராணுவ புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் கடந்த நவம்பரில் வெளியிட்ட அறிக்கையில் 1983 இல் தனி நாட்டுக்கான போர் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து தமது தரப்பில் மொத்தம் 16 ஆயிரத்து 333 போராளிகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்திருந்தனர்.

9000 படையினர் கடந்த வருட போரில் காயமடைந்துள்ளார்கள். மொத்தப் படையினரில் இவர்கள் பத்தில் ஒரு பங்கினராவர். ஆனால் இந்தத் தொகையில் 40 சதவீதமானோர் சிறு காயங்களுக்குள்ளானதாக பிரிகேடியர் கருணாரத்ன தெரிவித்தார் இவர்கள் மீண்டும் இராணுவ சேவையில் ஈடுபட முடியுமென்றும் அவர் கூறினார்.

இளைப்பாறிய சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

இராணுவ புள்ளி விவரங்களை உண்மையாக எடுத்துக் கொண்டாலும் கடந்த ஆண்டு அவர்களது இழப்பு திகைக்கவைப்பதாக இருக்கிறது என்றார்.

பிரதேசம் அடிக்கடி கைமாறும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே இரு தரப்பினருக்கும் கடும் இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

குடாநாட்டுக்கான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு பிரதேசத்தை புலிகள் கைப்பற்றியமை இராணுவத்துக்கு முன்னொருபோதும் இல்லாதவாறு மிக மோசமான தோல்வியாகும் அரசின் இந்தத் தோல்வி வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகை செலவில் பெருமளவு ஆயுதங்களை கொள்வனவு செய்யவும் வைத்துவிட்டது.

புதிய கப்பல்கள், யுத்த தாங்கிகள், விமானங்கள் கொள்வனவு, உயர் படை அதிகாரிகளில் மாற்றங்கள் ஆகியவற்றை மேற்கொண்டு புலிகள் கைப்பற்றிய பகுதிகளில் சில மீட்கப்பட்டுள்ளன.

செக் தயாரிப்பான பல்குழல் ரொக்கட் லோஞ்சர்கள் நீண்டதூர பீரங்கிகள் போன்ற நவீன ஆயுதங்களை இருதரப்பினரும் பயன்படுத்தியதால் கடந்த வருடம் சிவிலியன்கள் தரப்பில 87 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 566 பேர் காயமடைந்தார்கள்.

மேலும் பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன 6

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கத்தின் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். புதிய உயர் கல்லூரியில் நடைபெறும்.

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் அனைவரையும் இந்தக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ-6)

# வரட்சி மற்றும் கால்நடைகளால் 250 ஹெக்டேயரில் பயிரழிவு!

வலிகாமம் மேற்கு, ஜன. 6

யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையின் போது கால்நடைகளினாலும் வரட்சி காரணமாகவும் மொத்தம் 250 ஹெக்டேயர்களில் நெற் செய்கை அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கால்நடைகளால் 150 ஹெக்டேயர் பரப்பிலும் — வரட்சி காரணமாக 100 ஹெக்டேயர் பரப்பிலும் பயிர் அழிவு ஏற்பட்டிருப்பதாக விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) எஸ். சின்னத்துரை தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்திலேயே மேற்படி தகவலை உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் அண்மையில் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை மொத்தம் 9,683 ஹெக்டேயரில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் பல்வேறு காரணங்களினால் 5,469 ஹெக்டேயரிலேயே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-175)

## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

நடத்தும்

## வருடாந்த திருவாசக விழா

காலம்: 07-01-2001 ஞாயிறு மு. ப. 8.30 மணி

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்

நிகழ்வுகள்:-

- அருளுரை:-
  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
  (நல்லை ஆதின முதல்வர்)
- தெய்வீக திருவாசக இசை:-
  நா. வி. மு. நவரத்தினம் குழுவினர்
  (இராமநாதன் நுண்கலைப்பீடம்)
- சிறப்புரை:-
  S. A. E. ஏகநாதன் அவர்கள்
  (மாவட்ட நீதிபதி, பருத்தித்துறை)
- வெற்றியீட்டிய மாணவர்களின் பண்ணிசையும் பரிசளிப்பும்.

குறிப்பு:- ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் உருவப்படங்களும், திருவாசக ஏடுகளும் ஆச்சிரமத்திற்கு மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக எடுத்துவரப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பேரவையினர்.

செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு. (சி/14649)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கந்தையா பசுபதி**

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தோற்றம் 08-02-1937

மறைவு 19-12-1999

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு
அணைந்து ஆண்டு ஒன்று ஆனாலும்
நொடிப் பொழுதில் எம்மை விட்டு
மறைந்த துயரமும் நினைவும்
என்றென்றும் எம்மை விட்டு அகலாது!

உங்கள் ஆத்ம சாந்திக்காகக் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி இறைவனை என்றும் இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு. (82533)

## பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் சங்கம் நிதி உதவி

தென்மராட்சி, ஜன. 6

பாதிப்புறும் நிலையிலுள்ள தனது கண்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக பளைப் பிரதேச செயலரிடம் உதவி கோரிய பெண்மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச இடம்பெயர்ந்தோர் சங்கத்தினர் ஆயிரத்து 500 ரூபா அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

பிரதேச இடம்பெயர்ந்தோர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்த தினத்தன்றே இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டதாக சங்கத் தலைவர் சு. தவரட்ணசிங்கம் தெரிவித்தார்.

பளை அரசர்கேணியைச் சேர்ந்த இராசையா லட்சுமி என்பவருக்கு கண் சிகிச்சைக்கான அன்பளிப்புத் தொகையை பளைப் பிரதேச செயலர் சு. புத்திரசிகாமணி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 6

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையுடன் கல்வி நிர்வாக சேவை தரம் 3 க்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்றும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறவுள்ள கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ச. நா தணிகாசலம் பிள்ளை ஆகியோர் விரிவுரைகள் நிகழ்த்தவுள்ளனர்.

(ஐ— 10)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 6

இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ளோரின் நன்மை கருதி இச்செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் அனைவரையும் பங்கு பற்றிப் பயனடையுமாறு பட்டதாரி ஆசிரியர் வாண்மை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

( ஐ — 10 )

# சாட்டிக்கடலில் உள்ள முட்கம்பி வேலியை அகற்றக் கோரிக்கை

வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரைப் பகுதியில் கரையிலிருந்து சுமார் 25 அடி தூரத்திற்கு அப்பால் கடலினுள் அமைக்கப்பட்டிருக்கும் முட்கம்பி வேலியினை அகற்றுவதற்குத் தேவையான ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தி அமைச்சர் கே என். டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாட்டி வெள்ளைக் கடற்கரையில் நீராடி உல்லாசமாகப் பொழுதுபோக்குவதற்கென யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் மக்கள் வருவது வழக்கம். ஆனால் தற்பொழுது கடலினுள் முட்கம்பி வேலி போடப்பட்டுள்ளதால் கடலில் நீந்தி நீராட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சாட்டிப் பகுதிக்கு வரும் உல்லாசப் பயணிகள் வருகை மிகக்குறைவாக உள்ளது. எனவே மக்களின் வசதி கருதி கடலினுள் போடப்பட்டிருக்கும் முட்கம்பி வேலியினை அகற்றுவதற்கு உரிய உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-167)

## சோளன், குரக்கன் உற்பத்தியாளருக்கு ஓர் அறிவித்தல்

எமது சங்கத்திற்கு UNDP நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இயந்திரமூலம் குருணியாக்கப்பட்ட கோழித்தீவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுகிறது.

இதற்காக நாம் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து சோளன், குரக்கன் என்பன கொள்வனவு செய்கின்றோம்.

**சோளன் 1 கிலோ ரூபா 25/-**

**குரக்கன் 1 கிலோ ரூபா 20/=**

உள்ளூரில் உற்பத்தி செய்பவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி-14660)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

**திரு. முருகேசு பாக்கியநாதன்**

அவர்கள் பனை அபிவிருத்திச் சபைத் தலைவராக மீண்டும் நியமனம் பெற்றதையிட்டு எமது சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திரு. மு. பாக்கியநாதன் அவர்களை மீண்டும் தலைவராக நியமனம் செய்த ஈ. பி. டி. பியின் கௌரவ செயலாளர் நாயகமும், வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, தமிழ் விவகார இந்து அலுவல்கள் கலாசார அமைச்சருமான

**கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
தெல்லிப்பழை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

(82600)

## மலர்வெளியீட்டு நிறைவில் மனம் நிறைந்த நன்றிகள்

27-12-2000 ஆம் திகதியில் நிகழ்ந்தேறிய வெள்ளி விழா மலர் வெளியீட்டு வைபவம் இனிது நிறைவு காணும் வகையில் சகலவழிகளிலும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கிய அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியை நவில்கின்றோம். வருகை தந்து சிறப்பித்த முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள், ஆசியுரை நல்கிய நல்லை ஆதீன முதல்வர் அவர்கள், மண்டபம் உள்ளிட்டதான அனைத்து வசதிகளையும் ஈந்து உடனின்று உதவிய யாழ். மத்திய கல்லூரிச் சமூகத்தினர், அறிமுக உரை, வெளியீட்டுரை, ஆய்வுரை ஆற்றி நின்ற அறிஞர் குழாம் மற்றும் கீதம் இசைத்து சிறப்பித்தவர்கள், ஒலி ஒளி அமைப்பில் உதவியவர்கள், பல பாகங்களிலுமிருந்து திரளாக சமுகமளித்து பெருவிழாவாக்கிய கூட்டுறவாளர்கள், மகளிர் அமைப்புக்கள், பணித் தொகுதியினர், குறிப்பாகவும் சிறப்பாகவும் பங்கேற்ற அனைவருக்கும் அன்பும், பணிவும் நிறைய நன்றி தெரிவித்து நிற்கின்றோம்.

மலர்க்குழு
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
வெள்ளி விழா அமைப்பு.

[சி/14657]

# ஆனையிறவைக் கைப்பற்றத் திட்டம் தயார்!

# அதன் விவரங்களை வெளியிட முடியாது!!

## தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.6

வடக்கில் எந்த இடத்தை எப்போது கைப்பற்றுவோம் என்ற நேர்த்தியான திட்டம் எனது கைகளில் இருக்கின்றது. ஆனையிறவை எப்போது எமது படைகள் சென்றடையும் என்பதை நான் அறிவேன். ஆனால் அந்தத் திட்டத்தின் திகதியையும் விவரத்தையும் ஒரு பொறுப்பு வாய்ந்த பிரதமர் என்ற வகையில் என்னால் இப்போது வெளியிட முடியாது.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவையில் வியாழன் இரவு ஒலிபரப்பான தொலைக்காட்சிக் கலந்துரையாடல் நிகழ்ச்சியிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

'பிரதமரே என்ன நடக்கிறது?' என்ற இந்த நிகழ்ச்சியில் பொது மக்களின் கேள்விக்கும் பிரதமர் பதிலளித்தார்.

புலிகளைத் தொடர்ந்து தாக்குவோம். உதயமாகும் நாளைய பொழுதிலும் நாம் புலிகளை உக்கிரமாகத் தாக்குவோம். இதில் இருவேறு பேச்சுக்கு இடம் இல்லை.

தங்கள் உடம்பு மிக மோசமாக வலிக்கும்போதே புலிகள் சமாதானம் குறித்துப் பேசுகிறார்கள். நான் மீண்டும் சொல்கிறேன். பயங்கரவாதத்துக்கான பதிலை அதன் பாஷையிலேயே கொடுக்கவேண்டும் என்பதில் அரசு எப்போதும் ஒரே கொள்கையில் இருக்கின்றது - என்றும் பிரதமர் பொதுமக்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தொண்டர் படை ஒன்றை அமைத்து மூன்று வருடங்களுக்குள் போரை முடிவுக்குக் கொண்டுவர நாம் நேர்த்தியான திட்டங்களை வகுத்து வைத்துள்ளோம்.

ஆனையிறவு எப்போது கைப்பற்றப்படும் என்பதும் எந்தப்பகுதியை எப்போது நாம் வெற்றி கொள்வோம் என்பதும் எமது திட்டத்தில் தெளிவாக இருக்கின்றன.

விலைவாசி அதிகரிப்பால் இன்று மக்கள் சில கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என்பதை நாம் அறிவோம்.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் நாம் அக்கறையுடன் இருக்கின்றோம். பெற்றோல் விலை அதிகரிக்கின்றது என்பதற்காக நாடாளுமன்றத்துக்கு மாட்டு வண்டிலிலும், சைக்கிளிலும் வந்து அரசியல் லாபம் தேட எதிர்க்கட்சி முயற்சிக்கும் போது எப்படி புதிய அரசியல் கலாசாரம் பற்றிப் பேசுவது? - என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

(ஐ)

## கொழும்பில் சுவரொட்டி

கொழும்பு,ஜன.6

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் கொழும்பில் ஒட்டப்பட்டுள்ளன.

'மக்களுக்கான சமாதான முன்னணி' என்ற பெயரில் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.(உ-3)

## பஸ் கட்டணம் ஞாயிறு முதல் 15 வீதம் உயரும்

கொழும்பு,ஜன.6

எரிபொருள் விலையேற்றத்தை அடுத்து பஸ் கட்டணங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் 15 வீதத்தால் அதிகரிக்கப்பட இருக்கின்றன.

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் போக்குவரத்து அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இது தொடர்பான இணக்கம் ஏற்பட்டது.

தனியார் மற்றும் போக்குவரத்துச் சபை பஸ்களின் கட்டணங்களே அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் சுடப்பட்டுக் காயம்

நிந்தவூரில் கடந்த புதனன்று இரவு 10 மணியளவில் கல்முனைப் பொலீஸ் நிலைய றிசேர்வ் சப். இன்ஸ்பெக்டர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயம் அடைந்தனர்.

பிரஸ்தாப சப். இன்ஸ்பெக்டரின் குடும்பத்தினருக்கும், தாக்குதலுக்கு இலக்கானவர்களுக்கும் இடையில் நிலவிய காணித் தகராறின் எதிரொலியாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சப் இன்ஸ்பெக்டர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுளார். (உ-3-14-21)

## படையினரின் மோசமான தோல்விகள் இணையத் தளத்தில் இருட்டடிப்பு!

இலங்கை இராணுவம் புதிதாக ஆரம்பித்துள்ள இணையத்தளத்தில் (Web Site) படையினருக்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட பல தோல்விகள், பின்னடைவுகள் குறித்த தகவல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக 'இந்துஸ்தான் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருக்கின்றது.

1999, 2000 ஆண்டுகளில் யுத்தத்தில் படையினர் சந்தித்த தோல்விகள் எதுவும் அந்த இணையத்தளத்தில் குறிப்பிடப்படவில்லை.

1999ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கும், ஜூன் மாதத்துக்கும் இடையில் வன்னியின் மேற்குப்பகுதியில் நடத்தப்பட்ட 'ரணகோஷ' படை நடவடிக்கையின் வெற்றி குறித்து வர்ணிக்கும் அந்த இணையத்தளத்தில் - 2000ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குப் பின்னர் இராணுவத்துக்கு ஏற்பட்ட தோல்விகளை குறிப்பிடவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் 'ஓயாத அலைகள் 3' தொடர் இராணுவ நடவடிக்கையால் இராணுவத்துக்கு ஏற்பட்ட தோல்விகள் குறித்து முற்றாக மறைக்கப்பட்டுள்ளது.

புலிகளின் 'ஓயாத அலைகள் 3' இராணுவ நடவடிக்கையால் ஆனையிறவு மற்றும் தென்மராட்சி, வடமராட்சியின் பெரும்பாலான பகுதிகள், சாவகச்சேரி ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன. அதனால் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை ஆகியன நடுநிலையாக்கப்பட்டதுடன் யாழ்.நகரம் முற்றுகைக்கு உள்ளானதுடன் முழு நாடும் "யுத்தகால நிலைமையில்" காணப்பட்டது.

பின்வரும் விடயங்கள் அந்தத் தளத்தில் குறிப்பிடப்படவில்லை. 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி கிழக்கு வன்னியில் உள்ள ஒட்டுசுட்டான் வீழ்ச்சி கண்டமை, அதற்கு ஒரு தினத்துக்குப் பின் நெடுங்கேணி புலிகளால் கைப்பற்றப்பட்டது, அந்தத் தாக்குதலின் இரு நாள்களில் 1,800 படையினர் கொல்லப்பட்டதாக புலிகள் உரிமை கோரினர். நவம்பர் 4ஆம் திகதி அம்பகாமம், வவுனியா, யாழ்ப்பாண A9 வீதியின் முக்கிய தளமான மாங்குளம் ஆகியன வீழ்ச்சி கண்டமை, நவம்பர் 9ஆம் திகதி கனகராயன் குளம், புளியங்குளம் வீழ்ச்சி கண்டமை, அதற்கு அடுத்த தினம் ஓமந்தை வீழ்ச்சி கண்டமை போன்றவை அதில் கூறப்படவில்லை.

அத்துடன் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி வெற்றிலைக்கேணி, புல்லாவெளி வீழ்ச்சி கண்டமை, அதற்கு மறுநாள் மருதங்கேணி கைப்பற்றப்பட்டமை, டிசெம்பர் 17ஆம் திகதி பரந்தன், தெற்கு ஆனையிறவு கைப்பற்றப்பட்டமை, தனங்களப்பு ஊடுருவல் நடத்தப்பட்டமை, ஏப்ரல் 22ஆம் திகதியில் இயக்கச்சி, ஆனையிறவு போன்றன கைப்பற்றப்பட்டமை போன்றன எதுவும் அதில் கூறப்படவில்லை. (ஐ)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை உயர் வகுப்பு மாணவிகள் மன்ற ஒன்று கூடல் அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் உரையாற்றுவதையும் மாணவிகள் மன்றத் தலைவி செல்வி ராதிகா பரராஜசிங்கம், செயலாளர் செல்வி சுலோசனா இராஜேந்திரம், பதிலதிபர் ரி.வேலுப்பிள்ளை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் மு.ஸ்ரீபதி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம் :வடமராட்சி பிரதேச செய்தியாளர்)*



பிரம்மஸ்ரீ சபா.வாசுதேவசர்மா எழுதிய 'அர்த்தமுள்ள விவாகம்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்து ஆலயங்களின் மகாசபை போசகரும், வலிமேற்கு பிரதேசசபைத் தலைவருமான ந.திரிலோகநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் விழாவுக்குத் தலைமை வகித்த பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர், நூல்ஆசிரியர், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ)

## கிராம அலுவலர்களுக்கு இன்னமும் தினக்குறிப்பேடு வழங்கப்படவில்லை

வலி.வடக்கு,ஜன.6

கிராம அலுவலர்களுக்கான 2001ஆம் ஆண்டுக்கான அலுவலக தினக்குறிப்பேடுகள் வழங்கப்படாமையால் பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்கள் தினக்குறிப்பு இல்லாமலேயே தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிராம அலுவலர்களுக்கான தினக்குறிப்பு ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் திகதியிலேயே அவர்களுக்கு கையளிக்கப்பட வேண்டியது அவசியமாகும். (ஐ)

## யாழ்.சிறைச்சாலையில் இடநெருக்கடி அதிகரிப்பு

வலி.வடக்கு,ஜன.6

யாழ்.சிறைச்சாலையில் இடநெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

யாழ்.மாவட்டத்தில் நீதிமன்றங்கள் இயங்கத் தொடங்கியதும் தற்காலிகமாக வீடொன்றே சிறைச்சாலையாக மாற்றப்பட்டு கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது பல்வேறு குற்றச்சாட்டுகளின் பெயரிலும் அரச பாதுகாப்புப் படையினர் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் வேறு குற்றங் காரணமாகக் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் தண்டனை அனுபவிப்பவர்கள் என்று நூற்றுக்கு மேற்பட்டவர்கள் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள்கூட முழுமையாக இல்லாத நிலையிலேயே இச்சிறைச்சாலை உள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் தற்போது யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய நான்கு மாவட்ட நீதிமன்றங்களும் இயங்குவதுடன் இங்கு குற்றஞ்சாட்டப்படுபவர்கள் இச் சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்படுகின்றனர்.(ஐ-86)

## காயம்

மட்டக்களப்பு சின்னசப்போடையில் உள்ள கடை ஒன்றின் மீது கடந்த வியாழன் இரவு 9 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் தங்கராசா சபாரத்தினம் (வயது19) என்பவர் காயம் அடைந்தார். (உ-3-21)

## நாடுகடத்தல் ஒப்பந்தம்

கொழும்பு,ஜன.6

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நாடுகடத்தலை அங்கீகரிக்கும் ஆவணத்தில் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் கடந்த புதனன்று கைச்சாத்திட்டார்.

அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் கார்ள் இன்டர் பேத் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த போது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த ஆவணத்தை அவரிடம் கையளித்திருந்தார்.

இந்த ஆவணத்தை ஏற்றுக் கொண்டுள்ளதன் மூலம் இலங்கைக்கும். அமெரிக்காவுக்கும் இடையிலான நாடுகடத்தல் ஒப்பந்தம் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

(ஐ)


இன்று ஆரம்பம்

STAR

கல்வி நிறுவனம், சுன்னாகம்.

A/L 2003 கலை வர்த்தகம்

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | - P.மோகன் | தமிழ் | - N.பாலா |
| கணக்கீடு | - S.சுகிர் | இ.நாகரிகம் | - S.சோதி |
| வணிகக் கல்வி | - V.முரளி | நாடகம் | - M.சந்திரன் |
| அளவையியல் | - R.P.சர்மா | கிறிஸ்தவம் | - M.றெஜினா |
| புவியியல் | - S.மகேஸ் | ஆங்கிலம் | - V.விஜயபாஸ்கர் |

ஆரம்பம் :- இன்று (06.01.2001) சனி மாலை 3.00 மணி

(82593)

# மாணவரின் அறிவு விருத்தியில் விஞ்ஞான சங்கத்தின் பங்களிப்பு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கமானது அது ஆரம்பிக்கப்பட்ட 1991 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண சமூகத்தின் அறிவியல் மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வருகின்றது. குறிப்பாக பாடசாலை மாணவர்களின் அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் பல போட்டிகளை அறிமுகம் செய்து பல ஆண்டுகளாக திறம் பட நடத்தி வருகின்றது. இந்த வரிசையில் முதலில் விஞ்ஞான வினா விடைப் போட்டியும் (**Quiz Contest**), விஞ்ஞான பேச்சுப் போட்டியும் (**Oratorical Contest**) க.பொ.த (உ.த) மாணவர்களிடையே அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. பின்னர் க.பொ.த. (உ.த), க.பொ.த. (சா.த) மாணவர்கள் பங்கு பற்றும் வகையில் கண்காட்சிப் போட்டி (**Exhibition Contest**) அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. மேலும் கடந்த வருடம் கட்டுரைப் போட்டி (**Essay Contest**) அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இப் போட்டிகளை ஒவ்வொரு வருடமும் வேறு வேறு பாடசாலைகளில் நடத்துவதன் மூலம் அந்தச் சுற்றுச் சூழலில் விஞ்ஞானம் சம்பந்தமாக ஒரு விழிப்புணர்ச்சி யையும் உருவாக்கி வ்ருகிறது. இம் முறை இப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரியில் ஜனவரி மாதம் 11,12, 13 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது. இதற்கான ஆயத்தங்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இக் கட்டுரை வெளிவருவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

இப்போட்டிகளில் விஞ்ஞான கண்காட்சிப் போட்டி மிகவும் தனித்துவமானது. கண்காட்சிப் போட்டியானது மாணவர்களது செயற்திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாது மாணவ சமுதாயத்திற்கும், பொது மக்களிற்கும் அர்களது விஞ்ஞான அறிவை மேம்படுத்த மிகவும் உதவுகிறது. யாழ்ப்பாணத்தின் தற்போதய போர்ச் சூழலின் மத்தியிலும், பாடசாலைகளில் செயன்முறைப் பயிற்சிகளுக்குப் போதிய வசதியில்லாத நிலையிலும் மாணவர்கள் பல சிரமங்களின் மத்தியில் வெளிப்படுத்தும் செயல் திறமை பார்க்கும் அனைவரையும் வியப்படைய வைக்கின்றது. மேலும் கண்காட்சிப் பொருட்களை செய்வது ஒரு கூட்டு முயற்சியாகும். இது மாணவர்-மாணவர்களுக்கிடையேயும், மாணவர்-ஆசிரியர்களுக்கிடையேயும் உள்ள இடைவெளி குறைந்து ஒற்றுமையுடனும் நல்லெண்ணத்துடனும் சமூகம் முன்னேற வழிவகுக்கிறது. அத்துடன் இக் கண்காட்சிப் போட்டியில வெற்றி பெறவேண்டும் என்ற போட்டி மனப்பான்மை இருந்தாலும் பாடசாலைகளுக்கிடையில் பொறாமை, மனக்கசப்பு என்பவை இருப்பதில்லை. இது மாணவர்களின் நடத்தையைச் செம்மைப்படுத்த உதவுகிறது. நல்ல காட்சிப் பொருள் ஒன்று செய்ய வேண்டும். போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணங்கள் வந்தவுடன் மாணவர்கள் தம் மனதை ஒரு நிலைப்படுத்தி விவரங்களைச் சேகரிப்பர். இதுவும் அவர்களின் மூளை வளர்ச்சிக்கு மிகவும் உதவுகிறது. மேலும் நாம் புத்தகங்களை வாசித்து ஒரு விடயத்தை கிரகித்துக் கொள்வதை விட அதை கண்ணால் பார்த்து அதே நேரம் அது பற்றிய விடயங்களை காதால் கேட்கும் பொழுது மிகச் சிறப்பாகக் கிரகித்துக் கொள்ள முடியும்.

இத்தகைய சிறப்பம்சங்கள் உள்ள கண்காட்சிப் போட்டியால் க.பொ.த. (உ.த), க.பொ.த (சா.த) மாணவர்கள் பயன் பெற வேண்டும் என்ற நோக்கில் பாடசாலைகளுக்கு இடையிலான கண்காட்சிப் போட்டி முதன் முதலில் 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28,29ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்டது. அந்நேரம் இப்போட்டியில் 20 பாடசாலைகள் பங்கு பற்றின.

கடந்த வருடம் ஜனவரி மாதம் 29,30ஆம் திகதிகளில் யாழ். விஞ்ஞானச் சங்கம் இரண்டாவது கண்காட்சிப் போட்டியினை யாழ். மத்திய கல்லூரியில் நடத்தியது. இக் கண்காட்சி சிறந்த முறையில் நடைபெற்று பலரினதும் பாராட்டுக்களைப் பெற்றது. இது பற்றி 'உதயன்' பத்திரிகையும் (06.02.2000), தினக்குரல் பத்திரிகையும் (07.04.2000) பாராட்டிக் கட்டுரைகள் பிரசுரித்தன. இப்படியான கண்காட்சிப் போட்டிகள் உலகிலேயே மிகவும் அரிதாகவே நடைபெறுகின்றன. இந்த அரிய சந்தர்ப்பத்தை யாழ். மாவட்ட மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்து ஊக்குவிக்கும் யாழ்.விஞ்ஞான சங்கத்தின் சேவை பாராட்டப்படவேண்டியதொன்றாகும்.

இந்தக் கண்காட்சிப் போட்டியில் நாம் எதிர்நோக்கும் ஒரேயொரு பிரச்சினை சிறந்த கண்காட்சிப் பொருளைத் தெரிவு செய்வதாகும். ஏனெனில் ஒவ்வொரு கண்காட்சிப் பொருளையும் பார்க்கும்போது அது ஏதோ ஒரு வகையில் தனித்துவமாகவும், சிறந்ததாகவும் தோன்றும். அதனால் நடுவர்கள் மிகவும் நுணுக்கமாக பல சிறப்பியல்புகளை ஆராய்ந்து புள்ளிகள் இடுவார்கள். சிறந்த கண்காட்சிப் பொருள் எப்படி தெரிவு செய்யப்படுகின்றன. என்பது பற்றி மாணவர்களும் பொது மக்களும் அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

புள்ளிகள் [illegible] இரண்டு சுற்றுக்களாக நடைபெறும். முதலாவது சுற்றில் சகல நடுவர்களும் சகல கண்காட்சிப் பொருள்களையும் பார்வையிட்டு எடைபோட்டு முதல் மூன்று இடங்களைப் பெறக் கூடிய காட்சிப் பொருள்களைத் தெரிவு செய்வர். இரண்டாவது சுற்றில் ஒரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்த ஒவ்வொரு கண்காட்சிப் பொருளையும் மூன்று நடுவர்கள் பார்வையிட்டு புள்ளிகள் இடுவார்கள். இதிலே இருவர் அக் குறிப்பிட்ட துறையைச் சார்ந்தவர்களாகவும், ஒருவர் அந்தத் துறையை சாராதவராகவும் இருப்பர். இவர்களில் ஒரு நடுவர் எல்லாக் கண்காட்சிப் பொருள்களுக்கும் புள்ளிகள் இடுபவராக இருப்பார். இறுதியில் மூன்று நடுவர்களினாலும் கொடுக்கப்பட்ட புள்ளிகளின் சராசரி கணிக்கப்பட்டு சிறந்தவை தெரிவு செய்யப்படும்.


கலாநிதி
நாகலிங்கம் சிவயோகன்
கண்காட்சிப்பொறுப்பாளர், சிரேஷ்ட விரிவுரையாளர்,
பௌதிகவியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.


கண்காட்சிப் பொருள்களுக்கு புள்ளிகள் இடும் போது நடுவர்கள் பின்வரும் சிறப்பியல்புகளை நுணுக்கமாக ஆராய்வர். முதலில் கண்காட்சிப் பொருள்கள் எவ்வளவு தகவல்களைத் தருகின்றன என்றும், ஒருவரின் ஆர்வத்தை எவ்வளவு தூரம் தூண்டுகின்றன என்றும், பாடத்திட்டங்களிற்கும், சமூகத்திற்கும் எந்தளவிற்கு அவ்விடயம் முக்கியமானது என்றும் மதிப்பிட்டு புள்ளிகள் இடப்படும். பின்னர் மாணவர்களின் திட்டங்கள், செயல்த்திறன் என்பன பற்றி கண்காட்சிப் பொருள் தயாரிப்பு அவர்களின் சொந்த முயற்சியா? அதைச் செய்வதில் பிரயோகிக்கப்பட்ட நுட்பங்கள் என்ன? அது பாவனைக்குரியதா? என்பவை பற்றி ஆராய்ந்து புள்ளிகள் இடப்படும்.

அத்துடன் கண்காட்சிப் பொருளை தயாரிப்பதில் மாணவர்கள் எந்தளவு சிரம்பட்டு இருப்பார்கள்? எந்தளவு தூரம் எளிமையாகக் கிடைக்கக் கூடிய பொருட்களை வைத்து செய்தனர்? என்பன பற்றி அறிந்தும் புள்ளிகள் இடப்படும். மேலும் மாணவர்கள் பதாகைகள் மூலமும், வாய்மொழி மூலமும் கொடுத்த விளக்கங்களிற்கு புள்ளிகள் கொடுக்கப்படும். இறுதியில் நடுவர்களின் கேள்விகளுக்கு மாணவர்கள் கொடுக்கும் விடைகளுக்கும் மேலதிக விளக்கங்களுக்கும் புள்ளிகள் இடப்படும். இப்படியாக மேலே குறிப்பிடப்பட்ட சிறப்பியல்புகளுக்கு தனித்தனியாக புள்ளிகள் இடப்படும்.

சென்ற வருடம் இப்போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற பொது பங்கு பற்றிய மாணவர்களின் ஆற்றலைக் கண்டு ஒரு கணம் பிரமித்தாலும், அவர்கள் இவற்றைத் தம் சொந்த முயற்சியால் தான் செய்தார்களா? அல்லது அவர்களின் ஆசிரியர்கள் உதவினார்களா? என அறிய பல மாணவர்களையும், ஆசிரியர்களையும் பேட்டி கண்டோம். அவற்றிலிருந்து பொதுவாக ஆசிரியர்கள் மாணவர்களை வழி நடத்தி விடயங்களைத் தேடத் தூண்டியுள்ளார்கள் என்பது தெளிவாகப் புரிந்தது. அத்துடன் ஒரு சில மாணவர்களின் பெற்றோருடன் தொடர்பு கொண்ட போது தமது பிள்ளைகள் போட்டி நடைபெறுவதற்கு இரண்டு, மூன்று வாரங்களுக்கு முன்பிருந்தே காட்சிப் பொருள் பற்றிய விடயங்களை சேகரிப்பதிலும், அது பற்றிய சிந்தனையிலும் அதிக நேரத்தைப் பயன்படுத்தியதாகவும் தெரிவித்தார்கள். மாணவர்களுடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் ஒரு மன நிறைவில் இருப்பதாக சொன்னார்கள். தாங்கள் செய்த கண்காட்சிப் பொருள் பற்றி தாம் நிறைய விடயங்கள் சேகரித்தால் அவை தமக்கு பாடங்களில் உதவும் என்றும் கூறினார்கள். இதில் இருந்து இக் கண்காட்சிப் போட்டிக்கு ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியோரின் பங்களிப்பும் கண்காட்சியின் வெற்றியினைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாக உள்ளது என்பதை நாம் அறியலாம்.

அத்துடன் இக்கண்காட்சிப் போட்டியானது வேறு வேறு பாடசாலைகளில் நடத்தப்படும் போது அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர், மாணவர்களின் பங்களிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. இந்த வகையில் கண்காட்சிப் போட்டியானது பல கோணங்களில் மாணவ சமுதாயத்தினதும், பொது மக்களினதும் விஞ்ஞான அறிவை மேம்படுத்தி ஒரு சிறந்த எதிர் காலத்திற்கு வழி வகுக்கும் என்பதில் ஐயம் இல்லை. இந்தப் போட்டியை யாழ். விஞ்ஞான சங்கத்தினர் தொடர்ந்தும் வருடா வருடம் நடத்தி மாணவர்களின் விஞ்ஞான அறிவை விருத்தி செய்ய வேண்டும். இதற்குப் பாடசாலைகளும் பொது மக்களும் வேண்டிய உதவிகளை யாழ்.விஞ்ஞான சங்கத்துக்கு வழங்க முன்வரவேண்டும். ☆

## யாழ்.மேயராக ரவிராஜ் மாத இறுதியில் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.மாநகர சபையின் தற்போதைய பிரதி மேயர் சட்டத்தரணி என். ரவிராஜ் இம்மாத இறுதியில் யாழ். மேயராகப் பதவியேற்கவுள்ளார்.

யாழ்.மாநகர சபை மேயராகக் கடமையாற்றிய பொன்.சிவபாலன் யாழ்.மாநகர சபையின் இந்து விடுதிக் கட்டடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்ததைத் தொடர்ந்து கடந்த ஒன்றரை வருட காலமாக மேயர் பதவி வெற்றிடமாக இருந்து வருகின்றது.

இதேவேளை,சபையின் பிரதி மேயராக செல்லன் கந்தையன் பதவியேற்கவுள்ளார் என்று மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)



அருட்திரு. றெக்ஸ் சௌந்தரா அடிகளாரின் 'இது எங்கள் காணிக்கை' ஒலி நாடாவின் வெளியீட்டு விழா அண்மையில் சில்லாலை றோமன் கத்தோலிக்க த.க. வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையிடம் அருட் திரு. றெக்ஸ் சௌந்தரா அடிகளார் ஒலி நாடாவை வழங்குவதையும் அருகில் விழாவுக்குத் தலைமை வகித்த 'இசைத் தென்றல்' எம்.ஜேசுதாசன் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*



யாழ்.ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் நடத்திய ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றன.

இந்த விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக 'விடியலின் பூபாளம்' என்னும் நாடகத்தில் பங்குபற்றிய ரெலிக்கொம் நிறுவன கலைஞர்களை படத்தில் காணலாம். (ஜ-17)

## 45 ஆவது மணிவாசகர் விழா காரைநகரில் இன்று ஆரம்பம்

சைவ மக்களால் தெய்வ நிலையில் வைத்துப் போற்றப்படுபவர் மணிவாசகப் பெருமான் ஆவார். அப் பெருமானால் அருளிச் செய்யப்பட்ட திருவாசகம் என்னும் தெய்வத் தமிழ் மறை ஞானக் கருவூலமாகவும் சிறந்த இலக்கியச் சுடர்மணியாகவும் திகழ்வதுடன் மண்ணுலகத்தோர் வானுலகத்துக்கு ஏற அமைந்த ஓர் ஏணி போலவும் விளங்குகின்றது.

இத்தகைய சிறப்புகள் பொருந்திய ஞானநூலாம் திருவாசகத்தை மக்கள் எல்லோரும் உணர்ந்து அனுபவிப்பதற்கு உதவும் நோக்கத்துடன் காரைநகர் மக்களால் 1940 ஆம் ஆண்டு மணிவாசகர் சபை ஆரம்பிக்கப்பட்டது. 15ஆண்டுகள் வரை சபையானது திருவாசக வகுப்புக்களை நடத்தியும், சொற்பொழிவுகளை நிகழ்த்துவித்தும் சிறிய அளவில் தொண்டாற்றி வந்தது.1955 ஆம் ஆண்டில் சபையின் தொண்டுகள் விரிவடையத் தொடங்கின.அந்த ஆண்டு திருவெம்பாவைக் காலத்தில் ஈழத்துச் சிதம்பரத்தில் சபையினர் மணிவாசக விழாவை ஐந்து நாள்களா[illegible] நடத்தினர். மகாவித்து[illegible]ணையர் அவர்கள் நந்[illegible]யை ஏற்றிவைத்து ஆசி வழங்கினார். அமைச்சர் சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்கள் விழாவை ஆரம்பித்துத் தலைமை தாங்கினார்.இலங்கையில் முதன்முதலில் மணிவாசகப் பெரு மானுக்கு விழா எடுத்த பெருமை இச் சபையையே சாரும்.விழா ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. கடந்த காலங்களில் விழாவை ஆரம்பித்துச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு டாக்டர் சோ.சிங்காரவேலனார், டாக்டர் இரா. செல்வக்கணபதி, வித்துவான் திருமதி பரீனா, வித்துவான் வி.சா.குருசாமிதேசிகர் ஆகிய பேரறிஞர்களைத் தருமபுர ஆதீன மகா சந்நிதானத்தினர் இங்கே அனுப்பி வைத்திருந்தனர். 1962ஆம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானம், வித்துவான் சிவசுப்பிரமணியம் அவர்களை இங்கு அனுப்பி வைத்தது. சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதற்கு வித்துவான் கு.சுந்தரமூர்த்தி, மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர், சைவப் பேரறிஞர் தொ.மு. பாஸ்கரத் தொண்டமான், புலவர் இ.குழந்தையம்மான்,புலவர் ந.ரா. முருகவேள் முதலான தமிழகப் பேரறிஞர்களும் விழாக் காலங்களில் அழைக்கப்பட்டிருந்தனர்.

பேராசிரியர் இ.கனகசுந்தரம் யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு.ந.சபாரத்தினம், சங்க நூற் செல்வர் பண்டிதமணி சு.அருளம்பலவனார், கல்வி அதிகாரி வித்துவான் ச.சபாபதி, சைவமாமணி, வித்துவான் மு.சபாரத்தினம், வித்துவான் க.முருகேசன், டாக்டர் கு. தண்டாயுதபாணி, டாக்டர் ந.குணரத்தினம், பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை முதலான அறிஞர்கள் தலைவராகவும், செயலாளர் களாகவும் இருந்து தொண்டாற்றிய பெருமை இச்சபைக்கு உண்டு.

சபையானது பேரறிஞர் சிறிமத் சி.சுப்பிரமணியதேசிகர் அவர்களைக் கொண்டு திருப்பள்ளியெழுச்சிக்கும், திருவெம்பாவைக்கும் உரை எழுதுவித்து அச்சிட்டு அடக்க விலைக்கு விற்பனை செய்தது. டாக்டர் சொ.சிங்காரவேலன் அவர்களால் இயற்றப்பட்ட 'கதிர்காம சதகம்' என்னும் நூலை அச்சேற்றியது. தரமான நான்கு மலர்களை அச்சிட்டது; அன்றியும் ஆறு ஆண்டுகள் திருவாதிரை மலர்களையும் அச்சிட்டது. 1960ஆம் ஆண்டு தொடக்கம் காரைநகர்ப் பாடசாலை மாணவர்களிடையே சமய பாடப்பரீட்சையை நடத்தித் தங்கப் பதக்கங்களையும் விலையுயர்ந்த நூல்களையும் பரிசாகக் கொடுத்து வருகிறது. சபை மேற்கொண்ட பணிகளுள் தலையாயது சங்க நூற் செல்வர் சு.அருளம்பலனார் அவர்களைத் திருவாசகத்துக்கு உரை எழுதச் செய்தமையேயாகும்.


காரைநகர்
க.வைத்தீஸ்வரக் குருக்கள்


சபை 1970ஆம் ஆண்டு, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் வைத்து ஆயிரத்துக்கு மேற்பட்ட சைவப் பெருமக்கள் மத்தியில் உலகப் புகழ் பெற்ற சிவத்தமிழ்ச் செல்வி என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தமை ஈண்டு நிழனைவு கூருதற்குரியது.

இவ்வாண்டு 45 ஆவது மணிவாசகர் விழா ஆறாம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவிருக்கிறது.

கடந்த காலங்களில் 500க்கும் மேற்பட்ட திருவாசகத் தலைப்புகளில் சொற்பொழிவுகளை கேட்டு வந்ததினால் திருவாசகத்தையும் காரைநகர் மக்களையும் பிரிக்கமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. மக்களே திருவாசகப் பாடல்கள் என்று சொல்லும் அளவுக்கு காரைநகர் மக்கள் இருந்து வருகின்றார்கள் இதனை எண்ணிச் சபையினர் பெருமிதம் அடையலாம் அல்லவா! ☆

## புதிய அமைச்சர்களுடன் ஜோர்ஜ் புஷ்



அமெரிக்காவின் புதிய அதிபர் ஜோர்ஜ் புஷ் தனது அமைச்சரவையை அறிவித்த போது எடுக்கப்பட்ட படம்.
அமைச்சர்களான நோர்மன் மினேரா, லின்டா சாவேஸ், ஸ்பென்ஸ் ஏபிரகாம் ஆகியோர் உடன் உள்ளனர்.

# நவீனரக யுத்த விமானம்; இந்தியா பரிசோதித்தது!

புதுடில்லி,ஜன.6

இலகுரக யுத்தவிமானம் ஒன்றை இந்தியா உள்நாட்டிலேயே தயாரித்து வெற்றிகரமாகப் பரிசீலித்துள்ளது.

பெங்களூரில் உள்ள விமானத் தளம் ஒன்றில் இந்த விமானத்தின் மாதிரி விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது உலகின் நவீன யுத்த விமானங்களில் ஒன்றாகத் திகழும் என்று அதனை வடிவமைத்த இந்திய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சோதனை வெற்றி பெற்றதை அடுத்து 'சுப்பசொனிக்' போர் விமானங்களைத் தயாரிக்கும் ஆற்றல் பெற்ற 7 நாடுகளுடன் எட்டாவது நாடாக இந்தியாவும் இணைந்து கொண்டுள்ளது.

விமானத்தின் பரிசோதனை முயற்சிகள் வெற்றி பெற்றுள்ள போதும் அது முழுமையாகத் தயாரிக்கப்பட்டு பாவனைக்கு வருவதற்கு இன்னும் 10 ஆண்டுகள் செல்லும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

இந்த விமானத்தைத் தயாரித்து இந்தியா சந்தைப்படுத்தும் போது அந்த விமானங்களின் விலை தற்போது சந்தையில் உள்ள விலையில் மூன்றில் ஒரு பங்காக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இந்த விமானங்கள் இன்னும் ஐந்து ஆண்டுகளில் நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த முடியும் என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நம்பிக்கை தெரிவித்தார். (ம)

## பொஸ்னியா, கொசோவாவில் பணிபுரிந்த
# 'நேட்டோ' படையினருக்கு புற்றுநோய் தொற்றும் அபாயம்

பெல்கிரேட்,ஜன.6

கொசோவாவிலும், பொஸ்னியாவிலும் 'நேட்டோ' படையில் பணியாற்றிய வீரர்கள் சிலர் இரத்தப் புற்றுநோய் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த இடங்களில் 'நேட்டோ' அமைப்பு தாக்குதல் நடத்தியபோது யுரேனியம் ஏவுகணைகளை உபயோகித்ததால் ஏற்பட்ட கதிர் வீச்சே வீரர்களுக்கு இரத்தப் புற்றுநோய் ஏற்படக் காரணம் என்று கூறப்படுகின்றது.

1994-95ஆம் ஆண்டுகளில் பொஸ்னியாவிலும், 1999ஆம் ஆண்டு கொசோவாவிலும் இன ஒழிப்பு நடவடிக்கைகளைத் தடுப்பதாகக் கூறி 'நேட்டோ' அமைப்பு தாக்குதல் நடத்தியது.

பின்னர் அங்கு 'நேட்டோ' படைகள் கண்காணிப்புப்பணியினை மேற்கொண்டு வந்தன.

பொஸ்னியா மற்றும் கொசோவாவில் பணியாற்றிய நேட்டோ வீரர்கள் இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்து வருவதாகக் கூறப்பட்டது.

தாக்குதலுக்கு யுரேனிய ஏவுகணைகள் அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்டதாகவும் -

இதனால் ஏற்பட்ட கதிர் வீச்சினாலேயே இரத்தப் புற்றுநோய் பீடித்துள்ளதாகவும் நேட்டோ அமைப்பைச் சேர்ந்த நாடுகள் குற்றஞ்சாட்டி வந்தன.

டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளில் சிறிதளவு யுரேனியம் இருப்பதாக ஒப்புக்கொண்ட 'நேட்டோ' அமைப்பு, ஆனால் கதிர்வீச்சுப் பாதிப்பை ஏற்படுத்தாது என்று கூறி வந்தது.

பொஸ்னியாவும் கொசோவாவும் 'பல்கன்' கடலோரத்தில் இருப்பதால், நேட்டோ வீரர்களுக்கு ஏற்பட்ட கதிர் வீச்சுப் பாதிப்பு 'பல்கன் நோய் அடையாளம்' என்று பெயரிடப்பட்டது.

இந்த நிலையில் -

கொசோவாவில் பணியாற்றிய இத்தாலிய வீரர் ஒருவர் சமீபத்தில் இரத்தப் புற்றுநோயால் இறந்தார். கொசோவாவில் கடமையாற்றிய இத்தாலிய வீரர்களில் இதுவரை 6 பேர் இரத்தப் புற்றுநோயால் இறந்துள்ளனர்.

இதேவேளை பொஸ்னியாவில் பணியில் ஈடுபட்ட நேட்டோப் படையில் அங்கம் வகித்த போர்த்துக்கேய வீரர் ஒருவரும் இரத்தப் புற்றுநோயால் மரணமாகியுள்ளார்.

### உலக அரங்கில்

இந்த இறப்புகளை அடுத்து இத்தாலியப் பிரதமர் குயிலானோ அமட்டோ, கதிர்வீச்சுக் குறித்து அச்சம் வெளியிட்டுள்ளார்.

நேட்டோவில் அங்கம் வகிக்கும் பின்லாந்தும், ஸ்பெயினும் பொஸ்னியா, கொசோவாவில் பணிபுரிந்த தனது வீரர்களுக்குக் கதிர்வீச்சுக் குறித்த மருத்துவப் பரிசோதனை நடத்த முடிவு செய்துள்ளன.

பல்கன் நோய் அறிகுறி தொடர்பாகத் தான் நடத்திய சோதனைகளின் முடிவைப் பகிரங்கப்படுத்தப் போவதாகப் போர்த்துக்கேய அரசு அறிவித்துள்ளது. பொஸ்னியாவில் 11 ஆயிரம் யுரேனியம் குண்டுகளும் கொசோவாவில் 31 ஆயிரம் யுரேனியம் குண்டுகளும் வீசப்பட்டதாகக் கருதப்படும் நிலையில், அந்தப் பகுதிகளில் கதிர்வீச்சுப் பாதிப்பு உள்ளதாக நிரூபிக்கப்பட்டால் நேட்டோ அமைப்பும் அதன் முக்கிய அங்கத்துவ நாடான அமெரிக்காவும் பல சங்கடங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

### தடையை பாகிஸ்தான் செயற்படுத்தும்

தலிபான் ஆட்சியாளர்களுக்கு எதிராக ஐநா.விதித்துள்ள தடையை பாகிஸ்தான் செயற்படுத்தும் என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் அப்துல் சதார் தெரிவித்தார்.

தலிபான்களுக்கு ஆயுதங்களை வழங்குவது, விற்பது தடைசெய்யப்படும். தலிபான் தூதரகங்களை மூடிவிடுவது போன்ற தடைகளை ஐ.நா. அண்மையில் விதித்திருந்தது. இந்தத் தடை இந்த மாதம் 19ஆம் திகதி அமுலுக்கு வருகின்றது.

இவற்றைப் பாகிஸ்தான் உரிய முறையில் அமுல்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## பொருளாதார மந்த நிலையை போக்குவதற்கு வரிக் குறைப்பு
### ஜோர்ஜ் புஷ் அறிவிப்பு

வாஷிங்ரன்,ஜன.6

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையை நீக்குவதற்காக வரிக குறைப்பு செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

1.3 பில்லியன் டொலர் அளவுக்கு வரிக்குறைப்புச் செய்ய வேண்டும் என்று தான் நாடாளுமன்றத்தைக் கேட்கப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க பொருளாதார வளர்ச்சியில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள மந்த நிலை குறித்து ஜோர்ஜ் புஷ் கூட்டிய ஒரு மாநாட்டின் பின்னர் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட பொருளியல் வல்லுநர்கள் பலர் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட மந்தநிலையைப் போக்க வேண்டுமாயின் துணிச்சலான நடவடிக்கைகள் அவசியம் என்று சுட்டிக்காட்டி இருந்தனர்.

இதனாலேயே புஷ் திடீர் அறிவிப்பாக வரிக் குறைப்பை அறிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது. (ம)

### வளர்ந்துவரும் நாடுகளில்
## எய்ட்ஸ் நோய் பரவும் வீதம் கிராமங்களில் அதிகரிப்பு!
### ஐ.நா.அறிக்கையில் தெரிவிப்பு

வாஷிங்ரன்,ஜன.6

வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளில் 'எய்ட்ஸ்' நோய் பரவும் வீதம் நகரங்களிலும் பார்க்க கிராமங்களிலேயே அதிகமாக உள்ளது என்று ஐ.நா.உணவு விவசாய நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிராமங்களில் அதிகளவானோர் எய்ட்ஸால் பாதிக்கப்படுவதனால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. உணவுப் பொருள்கள் பாதுகாப்புத் தொடர்பாகவும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

உலகில் 3 கோடி 60 லட்சம் மக்கள் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 95 சதவீதமானோர் வளர்ந்துவரும் மூன்றாம் உலக நாடுகளிலேயே உள்ளனர்.

இந்த நோய் கிராமங்களில் அதிகளவு பரவுவதால் விவசாயிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### மேற்காசிய சமாதானம்
## கிளின்ரனின் முயற்சிகளுக்கு கால அவகாசம் போதாது

வாஷிங்டன்,ஜன.6

தனது பதவிக்காலம் முடிவடைவதற்குள் மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்க அதிபர் கிளின்ரன் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குப் போதிய கால அவகாசம் இல்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

மேற்காசிய வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நிபந்தனைகளுடன் கூடிய ஒத்துழைப்பை பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தும் இஸ்ரேலிய காபந்துப் பிரதமர் எகுட்பராக்கும் வழங்குவதாக உறுதி அளித்துள்ளனர். இதனை அடுத்து மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை துளிர் விட ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் இரு தரப்புகளையும் சமாதான உடன்படிக்கை ஒன்றுக்கு கொண்டு வருவதற்கு முயன்று கொண்டிருக்கும் கிளின்ரன் எதிர்வரும் 20ஆம் திகதி தனது பதவிக்காலம் முடிவடைந்து வெளியேறிச் செல்ல உள்ளார். அதற்கிடையில் மேற்காசிய சமாதான உடன்படிக்கை ஒன்று எட்டப்படும் சாத்தியம் இல்லை என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அரபாத் - கிளின்ரன் இணக்கம் குறித்தும் பேச்சு நடத்த இஸ்ரேலியப் பிரதமரின் பிரதிநிதி ஒருவர் நேற்றிரவு வாஷிங்ரன் வந்து சேர்ந்தார். அவர் இன்று அதிபர் கிளின்ரனுடன் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## மிகவும் எடை கூடிய பெண் ஆண் குழந்தை பிரசவித்தார்
### மருத்துவத்துறையில் அபூர்வ நிகழ்வு

பேர்லின்,ஜன.6

வடக்கு ஜேர்மனியில் 780 இறாத்தல் எடை கொண்ட தாய் ஒருவர் ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார்.

மருத்துவத்துறையில் இது ஒரு சாதனை என்று கருதப்படுகின்றது.

எடை மிக அதிகமாக - 780 இறாத்தல் கொண்ட பெண் ஒருவர் குழந்தை பிரசவித்திருப்பது உலகில் இதுவே முதற் தடவை என்று டாக்டர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுவாக உடல் எடை அதிகமான பெண்கள் கருத்தரிக்கும் சாத்தியம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## இஸ்ரேலிய முன்னாள் பிரதமர் பெரஸ் இந்தியாவுக்கு விஜயம்

இஸ்ரேலிய முன்னாள் பிரதமர் ஷிமோன் பெரஸ் நாளை மறுதினம் திங்கட்கிழமை உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியாவுக்கு செல்ல உள்ளார்.

மேற்காசியாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் இஸ்ரேலுக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் அவர் கோரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்கின் அமைச்சரவையில் அமைச்சராக இருக்கும் பெரஸ், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் உட்பட பல்வேறு தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்காசியப் பிரச்சினையில் ஆரம்பம் முதல் இந்தியா பலஸ்தீனத்தையே ஆதரித்து வருகின்றது. இந்தக் கொள்கையில் பெரஸின் விஜயம் பெரிய மாறுதல்கள் எதனையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றும் கூறப்படுகின்றது. (ம)



பிரபல இந்தி நடிகர் அமிர்தாப் பச்சனின் மெழுகு உருவச் சிலை லண்டனில் உள்ள 'மடேம்' காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. உலகில் முக்கிய பிரமுகர்களின் மெழுகு சிலைகள் இக்காட்சியகத்தில் உள்ளன. தனது உருவச் சிலையை அமிர்தாப் பச்சன் பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

## பாகிஸ்தான் புதிய ஏவுகணை தயாரிப்பு

இஸ்லாமாபாத்,ஜன.6

அணு ஆயுதங்களைச் சுமந்து கொண்டு 300 கிலோ மீற்றர் தூரம்வரை சென்று குறித்த இலக்கைத் தாக்கக் கூடிய 'பலஸ்டிக்' ரக புதிய ஏவுகணை ஒன்றை பாகிஸ்தான் தயாரித்துள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

'ஹைதர்-1' என்று இந்த ஏவுகணைக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் இந்த ஏவுகணை பரிசோதித்துப் பார்க்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீடியோ கமரா பனசோனிக் **N.V. 3500,** வீடியோ மிக்ஷர் பனசோனிக் **A.V.55,** டெக் வகைகள் **L-15, S.D. 225, G-10,** ஜெனரேற்றர் றொபின் **1200W,** என் லாஜர் **B/W** என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: யோகா, **78, K.K.S.** வீதி, சுன்னாகம். (82516)

யாழ்.இந்துக் கல்லூரி வீதியில் 4 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கருணா, இல.586, **K.K.S.** வீதி (நாச்சிமார்கோயிலுக்கும் தட்டாதெருவுக்கும் இடையில்), யாழ்ப்பாணம். (82537)

நஷனல் **N.V 7500** டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 2863.** (82545)

மிகவும் நல்ல நிலையில் உள்ள (2000ஆம் ஆண்டிற்கான வரி, காப்புறுதியுடன்) **VOLKSWAGEN CAR** விற்பனைக்கு உண்டு. புறோக்கர் தேவையில்லை. விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம். அத்துடன் **Eletric kettle**, சிறிய மேசையும். பார்வையிடும் நேரம்: காலை 9 மணி-மாலை 2மணிவரை. **127, Temple Road, Nallur (UN staff house)** விலாசத்திலும் மாலை 4 மணிக்குப் பின் **No. 42, St. Anneis Lane, (UN staff house) Pandiyanthalvu** என்ற முகவரியிலும் பார்வையிடலாம். (82459)

சித்தன்கேணிச் சந்தியில் இருந்து வட்டுக்கோட்டை வீதியில் இருக்கும் எனக்குச் சொந்தமான நாற்சார் வீடும் அதோடு சேர்ந்த கட்டட சாமான்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நா.சபாபதிநாதன், நில அளவையாளர், சித்தன்கேணி. (82588)

**National Colour T.V** மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **S.S.** மரியதாஸ் 5 6/2, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம். (82595)

## கணிதம்

ஆண்டு 6 தொடக்கம் **O/L** வரை கட்டாய பாடமாகிய புதிய கணித பாடத்தினை 36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து குறைந்த காலத்தில் விசேட சித்தி அடைய கற்பிக்கப்படும். தனித்தோ, சிறுகுழுக்களாகவோ உங்கள் வீடுகளில் கற்றுக் கொள்ளலாம். க.ஆறுமுகநாதன் **c/o B.C** பாலசிங்கம், இல.3, 2ஆம குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (82436)

## MATHS, ENGLISH

**O/L Distinction, Credit** பெறுபேறு எடுக்க ஆண்டு 8-10 புதிய பாடத திட்டம் ஆரம்பத்திலிருந்து விசேடமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர்:- 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில பின்புறம்), திருநெல்வேலி. (82276)

## புறொயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட **BAIRAHA FARM** புறொயிலர் இறைச்சிக் கோழி, **CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS** எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **T.P.2868.** (81780)

கொழும்பிலிருந்து சுத்தம் செய்யப்பட்ட வஜிராபாம் புறொயிலர் இறைச்சிக் கோழி **KEELS,** சொசேஜஸ் என்பன விமானமூலம் தினந்தோறும் இறக்குமதி செய்யப்பட்டு மொததமாகவும், சில்லறையாகவும் விற்பனையாகின்றன. எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: **T.**கரன் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்திக்கடை. (82579)

## இறைச்சிக் கோழி விற்பனை

இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (82574)

## தவறிவிட்டது

சுதுமலை தெற்கு, மானிப்பாய் என்ற முகவரியைச் சேர்ந்த பொன்னையா தயாபரன் என்பவரது விசேட அடையாள அட்டையும், பாடசாலை அடையாள அட்டையும் (மா.இ.க) நவாலிக்கும் மானிப்பாய்க்கும் இடையில் 01-01-2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் றோசி மெடிக்கல்ஸ், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (82554)

## வீடு வாடகைக்கு

64 பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: **S.S.** மரியதாஸ் 5 6/2, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம். (82594)

## பொய்யா மொழி ஜோதிடம்

விவாகத்தடை, தொழில்தடை, கல்வித்தடை, பிரயாணத்தடை தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஜாதகத்துடன் வரவும். சனி, செவ்வாய் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர். ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம் (82570)

## கைதடி வடக்கில் தொடர்ந்து வசிக்கும் 17 குடும்பங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.6

கைதடி வடக்கு குமாரத்திப்பிட்டி என்னும் இடத்தில் 17 குடும்பங்கள் கடந்த 8 மாதகாலமாக வசித்து வருவதாக நேற்று முன்தினம் நாவற்குழிப் பகுதிக்குச் சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர்.

இவர்களுக்குத் தேவையான உலர் உணவு மற்றும் பொங்கல் பொருள்களுடன் தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கப் பிரதிநிதிகள் எதிர்வரும் திங்கட்கிழமை கைதடிக்குச் செல்ல உள்ளனர். (உ-4)

## மணிவாசகர் விழா

யாழ்ப்பாணம்,ஜன.6

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் விழா இன்று சனிக்கிழமை முதல் மூன்று தினங்கள் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தான வசந்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு விழாவை ஆரம்பித்துவைப்பார்.

பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் 'நானோ இதற்கு நாயகமே' என்ற தலைப்பில் உரையாற்றுவார். (உ-3)

## எழுத்தாளர் ஒன்றியக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.6

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். (ம)

---

# வாழ்த்துகின்றோம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III ற்குப் பதவி உயர்வு பெற்றுள்ள பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளரும் பிரபல இரசாயனவியல் ஆசிரியருமான

**உயர்திரு. ஆறுமுகம் மகாதேவன்**
B.Sc. Dip in Edu.

அவர்களின் சிறப்பு மிகு பணி எமது மாணவ சமூகத்திற்கு மென்மேலும் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| திரு.வி.சச்சிதானந்தன் | (அதிபர்) |
| செல்வி கு.தனவதி | (ஆசிரியர்) |
| திருமதி ரோகிணி தயானந்தன் | (ஆசிரியர்) |
| திருமதி மி.சச்சிதானந்தசிவம் | (ஆசிரியர்) |
| திருமதி அ.நவரட்ணராசா | (ஆசிரியர்) |

(82580)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 1932 - 05 - 07



உதிர்வு 2000 - 12 - 07

## அமரர் முருகன் சன்னதி

பூவுலகில் பூத்த எம் குடும்பத்தின் குலவிளக்கே!
பூரண ஒளி ஏற்றி, எம்மைவிட்டு பிரிந்ததுதான்
இனியெங்கே காண்போமையா?

எமது அன்புத் தந்தை சிவபதமடைந்த செய்தி கேட்டு, இறுதிக் கிரியைகளிற்கு உதவி புரிந்த, உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் மருத்துவமனையில் இருந்த போது உதவிகள் செய்தவர்கள் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இன்று (06-01-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்.

*பட்டியோடை,*
*அல்வாய் கிழக்கு, அல்வாய்* (82571)

---

**புதிய அனுமதிகள்**
**பிரிவு - II**
**தரம் 5 முதல O/L வரை**
**ஆரம்பம்: 06.01.2001 1.00p.m.**
**I.B.S கல்வி நிறுவனம்**
கோயில் வீதி,**I.C.R.C.** அருகில்
(82547)

---

**புலமைப் பரிசில் 2001**

பரீட்சை 17 இல் அதிகூடிய புள்ளி பெற்ற பரிசுக்குரியவர்கள

| | | |
|---|---|---|
| ம. அழகரசன் | - | 183 |
| ஆ. ஜதிகானந்த் | - | 178 |
| அ. சாயினி | - | 176 |
| உ. நிவேதிகா | - | 176 |

அடுத்த பரீட்சை நாளை ஞாயிறு காலை 8.30 மணி

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
(82573)

---

உ
சிவமயம்

**உடனுறை பத்திரகாளி சமேத வீரபத்திரர் தேவஸ்தானம்**
**கல்வியங்காடு.**

## வைகுண்ட ஏகாதசி உற்சவம்

விக்கிரம வருடம் மார்கழி மாதம் 22 ஆம் நாள் இன்று (06.01.2001) சனிக்கிழமை பகல் 1.45 மணிக்கு வீரபத்திரருக்கும் கிருஷ்ண பகவானுக்கும் 108 சங்காபிஷேகமும் விஷேட பூஜை தச அர்ச்சனைகளும் நடைபெற்று கிருஷ்ண பகவான் விசேட மேளக்கச்சேரியுடன் உள்வீதி, வெளிவீதி பவனி வருவார்.

அடியார்கள் அனைவரும் வந்து கிருஷ்ண பகவானின் அருள் பெற்று உய்வீராக.

உபயம்:
தேவஸ்தான பிரதம குரு,
**பொன். வரதராஜக்குருக்கள்.**
(82472)

---

**இசைப்பிரியர்களே!**

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும்,
யாழ்.முன்னணிக் கலைஞர்களும் இணைந்து வழங்கும்

## "இன்னிசை விருந்து"

காணத்தவறாதீர்கள்

**நாளை (07-01-2001) ஞாயிறு**
**மாலை 3.00 மணிக்கு ஒரு காட்சி மட்டுமே.**

**இடம்: *மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி***

வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

**விளம்பர அன்பளிப்பு:**
பட்டுப் புடைவைகள், சேட்டிங் சூட்டிங், ஸ்கேட் & பிளவுஸ்,
எவர் சில்வர், பான்சி குட்ஸ், பாட்டா, **D.S.I,**
அன்பளிப்புப் பொருள்களை நியாயமான விலையிலும்
மிகத் தெளிவான போட்டோ பிரதி செய்து கொள்ளவும்
நாடவேண்டிய இடம்:

**தணிஸ் ரெக்ஸ்**
*மூர்த்த நயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.*
(82583)

---

**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்** - யாழ்ப்பாணம்

## சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

**இன்று (06-01-2001) சனிக்கிழமை**

**இரவு நிகழ்ச்சிகள்**

7.30 - மங்கள வாத்திய இசை
திரு.கா.குகானந்தம் குழுவினர்.

**சொற்பொழிவு**

8.15 - திரு.க.மாணிக்கவாசகர்
9.00 - திரு.கைலாயபிள்ளை
9.45 - பிரம்மஸ்ரீ சிவராஜ சர்மா

**வீணை இசை**

10.15 - செல்வி நிசாந்தினி ரமணன்

**பஜனை**

11.00 - தேவஸ்தான பஜனை குழுவினர்
11.30 - கண்ணன் பஜனை குழுவினர்
12.00 - சங்கீத உபந்நியாசம்
பிரம்மஸ்ரீ. வை.நித்தியானந்த சர்மா
12.45 - வில்லிசை
கலாபூஷனம் - வில்லிசைப் புலவர்
**திரு.க.நா.கணபதிப்பிள்ளை**
(சின்னமணி) குழுவினர்
**"கண்ணன் தந்த கைகள்"**

***ஆதீன மகா சபை***
(82585)

---

# நீங்கா நினைவில் ஐந்தாம் ஆண்டு

அன்னை மடியில் 12 - 02 - 1968



பகவான் அடியில் 01 - 01 - 1996

## குணபாலசிங்கம் கிருபாகர் (G.K)

(விவசாய பொருளியல் இறுதியாண்டு மாணவன், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம்)

**திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி 06.01.2001**

உம்மைக் காணமுடியாமையால், உமதாத்மாவின், சக்திகளும்கூட அடங்கிவிட்டனவோ? என்று, அதிர்ந்துபோனோம். இருந்தும், குறைவில்லை உமதாத்மாவுக்கு, என்ற உண்மையை எமக்குணர்த்தி, உள்ளம் தெளிவுறவுதவும் பகவானுக்கே நன்றி கூறுகின்றோம்.

**- அம்மா, அக்கா, அண்ணா, அண்ணி.**

*அண்ணா*
*கு.சாந்தமோகன்* (கிராம அலுவலர்)
*கொக்குவில்.* (82590)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 6
இம்மாதம் 3 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(161876ஏ), (161876பி),
(169335ஏ), (169335பி),
(169335சி), (169335டி),
(170056ஏ), (170056பி),
(172805ஏ), (172805பி),
(172805சி), (172805டி),
(172930ஏ), (172991ஏ),
(172991பி), (174746ஏ),
(174981ஏ), (175000ஏ),
(175000பி), (175714ஏ),
(175802ஏ), (175806ஏ),
(175806பி), (175835ஏ),
(175864ஏ), (175865ஏ),
(175865பி), (175899ஏ),
(175899பி), (175956ஏ),
(175956பி), (176553ஏ ,
(176613ஏ), (176613பி),
(176661ஏ).

**நல்லூர்**

[152003ஏ), (174739பி),
[174790ஏ], [175922ஏ],
[176757ஏ], [176757பி],
[176757சி], [176790ஏ].
[176790பி.

**சண்டிலிப்பாய்**

[170145ஏ], [172812ஏ],
[172812பி], [172817ஏ],
[172817பி], [174807ஏ|,
[174807பி], [174845ஏ],
[174845பி], [174901ஏ],
[174901பி], [175892ஏ],
[ɩ75892பி], [175985ஏ],
[175985பி], [176006ஏ],
[176006பி], [176008ஏ],
[176008பி], [176008சி],
[176549ஏ], [176549பி],
[1766551ஏ], [176552ஏ],
[176552பி], [176563ஏ],
[176563பி], [176563சி],
[176626ஏ]. [176628ஏ],
[176628பி], [176628சி],
[176708ஏ], ]176737ஏ[
[177006ஏ].

**தெல்லிப்பழை**

(176543ஏ), (176543பி),

**உடுவில்**

(173046ஏ), (173047ஏ),
(173047பி), (173168ஏ),
(174938ஏ), (174638பி),
(174938சி), (174985ஏ),
(174985பி), (175087ஏ),
(175087பி), (175733ஏ).
(175733பி), (175733சி),
(175733டி), (175734ஏ),
(175734பி), (175798ஏ),
(175882ஏ), (175882பி),
(176551ஏ), (176599ஏ),
(176599பி), (176599சி),
(176599டி), (176727ஏ),
(176794ஏ), (176794பி),
(176799ஏ), (176535ஏ),
(176535பி),

இம்மாதம் 4 ஆம் திகதி வரையும் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(170321ஏ), (170321பி),
(170322ஏ), (172718ஏ),
(172718பி), (172718சி),
(176691ஏ), (176726ஏ),
(176726பி), (176788ஏ),
(176788பி), (176829ஏ),

**யாழ்ப்பாணம்**

(173576ஏ), (173576பி),
(173782ஏ), (173782பி),
(173782சி), (173852ஏ),
(173912ஏ), (173912பி).
(173912சி), (175218ஏ),
(175460ஏ), (175492ஏ),
(175522ஏ), (175531ஏ),
(175531பி), (175558ஏ),
(175635ஏ), (175654ஏ),
(175659ஏ), (175660ஏ),
(175686ஏ), (175691ஏ),
(178036ஏ), (178078ஏ),
(178123ஏ), (178170ஏ),
(178170பி),

**கரவெட்டி**

(145814ஏ), (145841பி),
(164469ஏ), (164624ஏ),
(164636ஏ), (164637ஏ),
(165416ஏ), (167144ஏ),
(167187ஏ), (167187பி),
(167187சி), (167315ஏ),
(167979ஏ), (167979பி),
(167979சி), (167979டி),
(172179ஏ), (172191ஏ),
(172211ஏ), (172214ஏ),
(172605ஏ), (172605பி),
(174286ஏ), (174327ஏ),
(174327பி), (174327சி),
(174327டி), (174477ஏ),
(174558ஏ), (174625ஏ),
(174661ஏ), (174661பி),
(176030ஏ), (176031ஏ),
(176124ஏ), (176124பி),
(176240ஏ), (176447ஏ),
(176447பி),

**கோப்பாய்**

(173609ஏ), (173609பி),

**நல்லூர்**

(166269ஏ), (171835ஏ),
(171835பி), (172028ஏ),
(172028பி), (173734ஏ),
(173734பி), (173734சி),
(173743ஏ), (175393ஏ),
(175393பி), (175650ஏ),
(175651ஏ), (175651பி),
(175707ஏ), (175707பி),
(175713ஏ), (175713பி),
(175713சி)
(175713டி), (175713ஈ).
(175713எப்), (178041ஏ),
(178041பி), (178041சி),
(178071ஏ), (178071பி),
(142052ஏ), (142052பி),
(166466ஏ), (166466பி),
(174958ஏ), (175754ஏ),
(175754பி), (176606ஏ),
(176606பி) (176606சி),
(176720ஏ), (176720பி),
(176725ஏ), (176766ஏ),
(176855ஏ), (176857ஏ),
(176857பி), (176866ஏ),

**பருத்தித்துறை**

(151095ஏ), (158075ஏ),
(158402ஏ), (158402பி),
(158420ஏ), (162213ஏ),
(162221ஏ) (162221பி),
(164986ஏ), (169506ஏ),
(169587ஏ), (169899ஏ)
(172580ஏ), (172580பி),
(172581ஏ), (172583ஏ),
(172583பி), (172583சி),
(172583டி), (174273ஏ),
(174273பி), (174365ஏ),
(174369ஏ), (174374ஏ),
(174413ஏ), (174413பி),
(174518ஏ), (174528பி),
(174571ஏ), (174571பி),
(174602ஏ), (174641ஏ),
(174641பி). (174641சி),
(174641டி), (174641ஈ),
(174642ஏ), (174642பி),
(174701ஏ), (174703ஏ),
(174703பி), (176171ஏ),
(176186ஏ), (176205ஏ),
(176205பி), (176328ஏ),
(176409ஏ), (176455ஏ),,
(176455பி),

**சண்டிலிப்பாய்**

(173066ஏ),

**தெல்லிப்பழை**

(177008ஏ), (18 902ஏ),
(187902பி),

**உடுவில்**

(170339ஏ),

(ம – 10)

## கணனிக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றமும் ஐ. பி. எம். எஸ் கணனிநிறுவனமும்இணைந்து நடத்தும் கணனிக்கண்காட்சி இன்று சனிக்கிழமை ஐ பி. எம் எஸ் கணனி நிறுவனத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கணனிக்கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் என்றும்—

மாணவர்கள் மற்றும் பொது மக்களின் கணனி அறிவை விருத்தி செய்யக்கூடிய விதமாக இந்தக்கண்காட்சி திட்டமிடப்பட்டிருப்பதாகவும்—

ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கண்காட்சியைப் பாடசாலை மாணவர்கள் பார்வையிட 10 ரூபா கட்டணச்சீட்டும், ஏனையவர்களுக்கு 20 ரூபா, 50 ரூபா என இரு பிரவேசச் சீட்டுகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

# கப்பல், விமானச் சேவைகளில் மதகுருமாருக்கு ஆசன ஒதுக்கீடு

வலிகாமம் தெற்கு, ஜன. 6
ஒவ்வொரு விமானப் பயணத்தின் போதும், கப்பல் பயணத்தின் போதும் இந்து மதகுருமார்களின் பாவனைக்கென மூன்று ஆசனங்கள் நிரந்தரமாக ஒதுக்கப் பட்டுள்ளன இவற்றை குருமார்கள் உரியமுறையில் பயன் படுத்திக் கொள்ள முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தம்மைச் சந்தித்துக் கலந்துரையாடிய சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிய பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இந்து மதகுருமார்கள் எதிர் நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து அமைச்சரை சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர் கடந்தவாரம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஒன்றியத்தின் உபதலைவர் சிவஸ்ரீ க. மகாகணபதிக் குருக்கள் தலைமையில் ஒன்றியச் செயலாளர் பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா, பொருளாளர் சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள், வடமராட்சிக் கிளைத் தலைவர் சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ ராம் கெங்காதரக்குருக்கள், தென்மராட்சி கிளை தலைவர் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ செ பரமானந்தக் குருக்கள் ஆகியோருடன் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் கௌரவ பிரதிநிதியாக இணைந்து அமைச்சரைச் சந்தித்து உரையாடினர்.

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்துக்கென தனியானதொரு கட்டடம் யாழ்ப்பாணத்தில் அமைத்து தர வேண்டும் என இவர்கள் கோரியபோது, அதற்குச் சம்மதம் தெரிவித்து கட்டடத்துக்கு தேவையான நிதி உதவி வழங்குவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

இச் சந்திப்பின் போது கலந்து கொண்ட நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராயன் நல்லூர் கந்தசாமிகோயில் சுற்றாலில் இந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு தாம் இட ஒதுக்கீடு செய்து தருவதாகக் கூறினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுடனான இச்சந்திப்பினை வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைவர் என். திரிலோகநாதன் ஒழுங்குபடுத்திக்கொடுத்திருந்தார். (ஐ-152)

## இலவச மருத்துவ சேவை

யாழ்ப்பாணம், ஜன. 6
பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் கரவெட்டி வளர்மதி அகதிகள் முகாமில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு டாக்டர். ஈ. யோகேஸ்வர தேவனின் உதவியுடன் இலவச மருத்துவ சேவை நடைபெறவுள்ளது. (ஐ-10)

## திருவாசக முற்றோதல்

மூளாய், ஜன. 6
மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் புதன்கிழமை காலை முதல் திருவாசக முற்றோதல் விழா நடைபெறும். (ம-99)

★ ★ ★

தென்மராட்சி, ஜன. 6
வதிரி, தாளையம்பதி, முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 6 00 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (ம-117)

★ ★ ★

மீசாலை இந்து அன்பர்களால் எதிர்வரும் 9 ஆம் திகதி துன்னாலை அல்லையம்பதி முருகன் ஆலயத்திலும், 10 ஆம் திகதி துன்னாலை இந்திரன் அம்பாள் ஆலயத்திலும் திருவாசக முற்றோதல் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. (ம-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 6
பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொள்வர். (ம)

★ ★ ★

தென்மராட்சி, ஜன. 6
அல்வாய் வடக்கு வேவிலந்தை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி விசேட பூஜையும் காலை 10.30 மணிக்கு சமயச்சொற்பொழிவும் இடம்பெறும்.

சமயச் சொற்பொழிவினை சிவஸ்ரீ சுரேஸ்வரக்குருக்கள் நிகழ்த்துவார்.

எதிர்வரும் பத்தாம் திகதி காலை 6.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை சாவகச்சேரி வித்தகம் குருபரமசாமி அடிகளும் வித்தக அன்பர்களும் இணைந்து திருவாசக முற்றோதல் நடத்துவார்கள்.

# கூட்டணிப் பிரதிநிதிகள் கல்வி அமைச்சருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ். மாவட்ட பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்துள்ள பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதிகள் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்தவைச் சந்தித்து விளக்கிக் கூறியுள்ளனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராஜா, யாழ். மாநகரசபை பிரதி மேயர் சட்டத்தரணி என். ரவிராஜ் ஆகியோர் கல்வி அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்தனர்.

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளுக்கு தேவையான தளபாடங்கள் மற்றும் விஞ்ஞான உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சரிடம் இச்சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி கட்டடத்துக்கு 25 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்து தருவதாகவும் —

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையில் 3 மாடிக் கட்டடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு கட்டடத்திணைக்களத்தின் ஊடாக அமைச்சுக்கு திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை —

இடம்பெயர்ந்துள்ள தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர்கள் தமது பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்களின் விவரப்பட்டியலை யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி ஒழுங்கையிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் ஜன. 6
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி சுவர்க்கவாசல் தரிசனம் இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று 11 மணிக்கு புதிய சித்திரத் தேரில் சுவாமி திருக்காட்சியளிப்பார்.

நாளை காலை 11 மணிக்கு திருவடிநிலை புனித ஷேத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும். (ஐ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 6
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம் இன்று காலை 6 30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாக உள்ளது.

காலை 6.30 மணிக்கு சுவர்க்கவாசல் தரிசனம் இடம்பெறும். அத்துடன் இரவு 8 மணி தொடக்கம் நாளை அதிகாலை 4 மணி வரையும் இசை நிகழ்வுகளும் சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளன (ஐ-10)

★ ★ ★

வலி. வடக்கு, ஜன. 6
குரும்பசிட்டி அருள்மிகு ஆலயங்களின் சார்பாக திருவெம்பாவை வழிபாடும் கூட்டுப் பிரார்த்தனையும் ஏழாலை தெற்கு வசந்தபுரம் அருள்மிகு ஸ்ரீவசந்தநாக பூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

குரும்பசிட்டி வளர்மதி சனசமூகத்தினரால் வருடாந்தம் நடத்தப்படும் இந்த விழாவில் அருள்மொழியரசு சிவானந்த வாரிதி, வாரியார் வாரிசு சிவத்திரு. வ. குமரசாமி ஐயா 'திருவெம்பாவை' என்னும் பொருளில் தெய்வீக சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஐ-86)

★ ★ ★

அரியாலை, ஜன. 6
சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் திருவெம்பாவை பூசை தினமும் காலையில் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை திருவாதிரை அன்று மாணிக்கவாசகப் பெருமான் முத்துச்சப்பறத்தில் வீதியுலா வாருவார். (ம-17)

★ ★ ★

அரியாலை ஜன. 6
ஈச்சமோட்டை 'கலட்டிப் புலம் வைரவர் ஆலயத்தில் திருவெம்பாவை பூஜைவிஷேட அபிஷேகங்களுடன் தினமும் காலையில் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. (ம-17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லையா இலட்சுமி

மாகியப்பிட்டியைச் சேர்ந்த திருமதி செல்லையா இலட்சுமி நேற்று (5-1-2001) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, மகேஸ்வரி, செல்வராஜா (இளைப்பாறிய புகையிரத ஊழியர்), குணராஜா (புகையிரதப் பகுதி திருகோணமலை), தர்மராஜா (மயூரன் கொமினிகேஷன், ஆனைக் கோட்டை), சிவராஜா(ஆஸ்திரேலியா), புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் அருளானந்தம், காலஞ்சென்ற தேவசகாயம், மேரிதிரேசா, புஸ்பராணி, பற்றிமா, சுகிர்தம், ஞானரத்தினம், கனகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் வுளோறிடா, தேவமனோகரன், மேரிஜெயா, மேரிதிரேசா, ரவீந்திரகுமார், உதயசிறி, மேரிலெற்றீசியா, தேவ ஞானரூபி, சுகிர்தா, சூரியதாஸ், தர்மினி, செந்தூரன், சஞ்சீவன், தஸ்கீதன், ராஜ்மயூரன், பத்மசூரியா, ராஜ் டிலக்ஷன், யதர்ஷினி, டயானா தர்சினி, சேயோன், நாகலோஜினி, தர்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லபன், செபஸ்ரீபன், துஷாறா, கிஷோபஸ்ரீன், றொக்ஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-1-2001) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் மாகியப்பிட்டி கொட்டுப்பனை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. செல்வராசா (மகன்)
செ. தர்மராஜா (மகன்)

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (82620)

## திருமதி கார்த்திகேசு சரஸ்வதி
(ஆசையம்மா)

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கார்த்திகேசு சரஸ்வதி அவர்கள் 04-01-2001 வியாழக்கிழமை இரவு 9-00 மணியளவில் வவுனியாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கராஜா [உதவி அரச அதிபர்], சந்திரலிங்கராஜா [மரக் கூட்டுத்தாபனம்] மற்றும் ராஜா [உதவி ஆணையாளர், தொழில் திணைக்களம்], தர்மபூபதி [ஆசிரியை, ஆஸ்திரேலியா], செல்வரதி [ஆசிரியை, நுணாவில்], பாக்கியலிங்கம் [சட்டத்தரணி, கொழும்பு], பஞ்சலிங்கம் [ஆசிரியர், சாவகச்சேரி] ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மாதேவி, சிவயோகம் [ஆசிரியை], சந்திரஸ்ரீ [தொழில் திணைக்களம்], கணேசன் [ஆஸ்திரேலியா], கதிர்காமநாதன் [பதிவாளர், சாவகச்சேரி நீதிமன்றம்], சர்வேஸ்வரி, சாந்தாதேவி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று[6 01.2001] முற்பகல் 10-00 மணிக்கு வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கா. பஞ்சலிங்கம் (மகன்)
ஐயா கடையடி, சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
வசந்தவாசா,
சொற்றாவத்தை,
பொலிகண்டி. [சி/14664]

## திருமதி கலாவதி ஜெகதீஸ்வரன்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி கலாவதி ஜெகதீஸ்வரன் நேற்று (05-01-2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு. இராசதுரை ஜெகதீஸ்வரனின் அன்பு மனைவியும், செல்விகள் ஜெ. ஜெனோஜினி, ஜெ. ஜெதிர்ஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசதுரை-சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகளும் திரு திருமதி கந்தையா-தில்லையம்பலம் தம்பதிகளின் அன்பு மகளும் திரு. தி. ரவிச்சந்திரன் (ஜேர்மனி), திரு. தி. பாலசந்திரன் (நோர்வே), திரு. தி. இளங்கோவன், திருமதி கு. ஜெனனி(கனடா) ஆகியோரின் சகோதரியும் திருமதி பரமேஸ்வரி - அப்பு குலசேகரா, திரு. இ. தங்கேஸ்வரன், திரு இ. திலகேஸ்வரன் (ஜேர்மனி), திரு. இ. யோகேஸ்வரன் (நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), திரு. இ. சிவனேஸ்வரன் (யாழ். பல்கலைக்கழகம்), திருமதி சித்திரா ரவிச்சந்திரன், திருமதி சாந்தினி பாலசந்திரன், திரு.சி. குணசீலன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06-01-2001) சனிக்கிழமை காலை 10மணியளவில் நடைபெற்றுப்பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இலங்காட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. ஜெகதீஸ்வரன் (கணவன்)
க. தில்லையம்பலம் (தகப்பன்)

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். [82 609]

## மோட்டார்த் தாக்குதல்

நாகர்கோயில், நுணாவில், எழுதுமட்டுவாழ் ஆகிய பகுதிகளில் உள்ள படையினரின் நிலைகள் மீது செவ்வாய், புதன்கிழமைகளில் விடுதலைப் புலிகள் மோட்டார்த் தாக்குதல்களை நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் ஒருசிப்பாய் காயமடைந்ததாகவும் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்புத்துறைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது ரி — 81 மோட்டார் குண்டு ஒன்றைப் படையினர் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம—3)

## விளையாட்டுப் போட்டி

சுன்னாகம் புனித அந்தோனியார் இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் வலி தெற்குப் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் வே. குமாரவேல், தேசிய இளைஞர் சேவைகள் கழக வலி. தெற்கு உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-3)

## பாடசாலை மாணவிகளுக்கு உபகரணங்கள்

மகளிர் அபிவிருத்தி நிலையம் வருடாந்தம் செயற்படுத்தி வரும் அதன் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் இந்த வருடமும் 125 பாடசாலை மாணவிகளுக்கு கல்வி சார் உபகரணங்களை வழங்க உள்ளது.

உபகரணங்களை வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறும். பிரதமவிருந்தினராக ஓய்வு பெற்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு கலந்து கொள்வார்.

20 பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 125 மாணவிகளுக்கு நிகழ்வில் கொப்பிகள், பேனாக்கள், பென்சில்கள் போன்ற கல்விசார் உபகரணங்கள் வழங்கப்படும். (ம)

## பத்திரிகையாளர் சங்கக் கூட்டம்

வடமராட்சி, ஜன. 6

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சங்கத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி தலைமையில் யாழ்ப்பாணம் கொட்டடியில் நடைபெறவுள்ளது. (ம-173)


## காணி விற்பனைக்கு

கெருடாவில் தெற்கு தொண்டமனாறு 3ஆம் சந்தியில் கடை ஒன்று இரு அறைகளுடன் சகல வசதியுடைய 3 பரப்புக் காணி, தோட்டக்காணி, பனங்காணி என்பனவற்றுடன் விற்பனைக்குண்டு.

வ. நடராசா

பருத்தித்துறை வீதி,
இலங்கை நாயகி அம்மன் கோவிலடி,
கல்வியங்காடு.
(82603)

## விற்பனை ஊழியர் தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு ஆண் விற்பனை ஊழியர் தேவை.

18க்கும் 30க்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:
15 - 01 - 2001

விளம்பர இல. 1172, மே/பா உதயன்.
[82615]


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்த

### திரு. முருகேசு பாக்கியநாதன்

அவர்கள் பனை அபிவிருத்திச் சபைத் தலைவராக மீண்டும் நியமனம் பெற்றதையிட்டு எமது கொத்தணியின் சார்பில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவராக நியமனம் செய்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கௌரவ செயலாளரும், வடக்கு அபிவிருத்தி புனரமைப்பு புனர்வாழ்வு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சருமான

மாண்புமிகு

### கௌரவ கே.என்.டக்ளஸ்தேவானந்தா

அவர்களுக்கு எமது கொத்தணியின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
மானிப்பாய். (சி/14662)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் துரைசிங்கம் (பயில்வான்)
(மதுபான நிலைய உரிமையாளர், பருத்தித்துறை)

புலோலி தெற்கு, சாரையடியைச் சேர்ந்த வல்லிபுரம் துரைசிங்கம் நேற்று (5-1-20001) காலமானார்.

அன்னார் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் ருக்குமணிதேவி (ஜேர்மனி), அமரர் லட்சுமி, அமரர் கிருஷ்ணானந்தன், அமரர் தெய்வேந்திரன், சுவேந்திரன் (ஜேர்மனி), யோகேஸ்வரி (லண்டன்), சாந்தரூபனி (லண்டன்), றஞ்சிதமலர் (ஆஸ்திரேலியா), சுபேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அமரர் நாகலிங்கம், அமரர் பாலகிருஷ்ணன், மகேந்திரம், சிவகுமார், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், பானுதேவன், நந்ததேவன், நிமலதேவன், சத்தியதேவன், ரஜனிகாந், ஸ்ரீகாந், பெரியகண்ணன், சின்னக்கண்ணன், கௌசல்யா, தட்சாயினி, பவானந்தன், துஷ்தா, சிவதர்ஷினி, ராயுராம், ரகுராம், தீபன், அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
துரைசிங்கம் கனகேஸ்வரி
(மனைவி)

புலோலி தெற்கு,
சாரையடி. (82608)

## திருமதி வெற்றிவேலு செல்லாச்சி

சரசாலை வடக்கைப்பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி வெற்றிவேலு செல்லாச்சி நேற்று (05-01-2001) தற்காலிக வதிவிடமான சுன்னாகத்தில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வெற்றிவேலு அவர்களின் அன்பு மனைவியும், வ. மகேஸ்வரி, வெ. தர்மலிங்கம், வெ. சிவபாதம் ஆகியோரின் அன்புத்தாயாரும், ச. வல்லிபுரம், த. நாகரத்தினம், சி. சித்திராதேவி ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்காலிக வதிவிடமான சுன்னாகத்தில் நேற்று (05-01-2001) வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
தர்மலிங்கம் (மகன்)
ச. வல்லிபுரம் (மருமகன்)

தற்காலிக முகவரி:
இலங்கை வங்கி வீதி,
சுன்னாகம்.

நிரந்தர முகவரி:
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(சி/14663)

# சுயநிர்ணய அடிப்படையிலான ஒரு தீர்வுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் தர வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக சமூகம் கோருகின்றது

யாழ். பல்கலைக்கழக எழுச்சி நிகழ்வுகளின் ஓர் அங்கமாக பல்கலைக்கழக சமூகத்தினரால் ஜனாதிபதி மற்றும் வெளிநாட்டுத் தூதர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜர் இங்கு பிரசுரமாகின்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர் சங்கம் மற்றும் பல்கலைக்கழகக் கல்வி சார், கல்வி சாரா தொழிற் சங்கங்கள் இணைந்து இந்த மகஜரை அனுப்பியுள்ளன.

இலங்கையில் வரலாற்றுக் காலம் தொட்டுச் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் நாடெங்கிலும் பரந்து வாழ்ந்துள்ளார்கள். நாளடைவில் தமிழ் மக்கள் தனித்துவமான பிரதேசத்தில் செறிந்து வாழ் இலங்கையின் இன்றைய வடக்கு-கிழக்கு மாகாணம் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகமாகியது. 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த போது பிரித்தானியரால் கையளிக்கப்பட்ட அரசியல் திட்டம் ஆட்சி அதிகாரத்தைப் பெரும்பான்மை மக்களாகிய சிங்கள மக்களுக்கே கையளிக்க ஆட்சியில் பங்கேதும் இல்லாத, தமிழ் மக்களுக்கெதிராக அவர்களின் பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அவர்களின் உரிமைகளைப் பறிக்கும் பல்வேறு சட்டங்கள் அமுலாக்கம் பெற்றன. ஏன் சுதந்திர இலங்கையில் உருவாக்கப் பட்ட அரசியல் திட்டங்கள் கூட தமிழ் மக்களின் பங்களிப்பின்றியே, அவர்களின் நலன்களைப் புறக்கணித்தே நிறைவேற்றப்பட்டன. இவற்றின் விளைவாகத் தமிழ் மக்கள் பல்வேறு அடக்கு முறைகளுக்கும். இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும் உள்ளாகினர்.

இதனால் தமது உரிமைகளை நிலை நாட்டுவதற்கென போராட்டம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது. கடந்த ஐம்பது வருடங்களாக நடைபெற்று வரும் இப்போராட்டம் தொடகத்தில் சாத்வீக அடிப்படையிலே தான் அமைந்திருந்தது. பலாத்காரத்தின் மூலமாக இது முறியடிக்கப்பட, கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டம் இதன் தவிர்க்க முடியாத விளைவாயிற்று. பல்லாயிரக்கணக்கான விலை மதிப்பற்ற உயிர்களையும், பல கோடி சொத்துக்களையும் பலியெடுத்த இப் போராட்டம் இன்று சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ந்துள்ளது யாவரும் அறிந்ததே. இதனையிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தினராகிய நாம் மனநிறைவடைகின்றோம்.

இன்று நாம் சர்வதேச சமூகத்திற்கு விண்ணப்பிப்பது இது தான். தமிழ் மக்கள் இன்று கௌரவத்துடன் கூடிய நிலையான சமாதானத்தில் தமது நீண்ட நாள் தியாகங்களையும் அபிலாஷைகளையும் அங்கீகரிக்கும் ஒரு தீர்வையே விரும்புகிறார்கள். இத்தகைய தீர்வை அடைவதற்கான முதற் படியாக கொடிய யுத்தம் நிறுத்தப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசு பேச வேண்டும். இத்தகைய பேச்சுவார்த்தை தமிழ்த் தேசிய இனம், அதன் மரபு வழித் தாயகத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அதன் எதிர் காலத்தைத் தீர்மானிக்க வழி சமைக்க வேண்டும். இத்தகைய வழிமுறைதான் தமிழ் மக்களின் நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு முடிவுகட்டும் என நாம் திடமாக நம்பி இதற்கான அழுத் தத்தை இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

எமது மேற்கூறிய நியாயபூர்வமான கோரிக்கைக்கு தங்களது ஆக்கபூர்வமான ஆதரவு கிடைக்கும் என நாம் நம்புகிறோம். (ஐ)


ஈசன் கல்வி நிலையம்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
கணக்கீடு
A/L 2001
PAPER CLASS (82599)
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl)
திங்கள், வியாழன்: 4.30 p.m.
ஆரம்பம்:
08.01.2001 (திங்கள்) 4.30p.m.


## சுயநிர்ணய உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மளிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் மன்றங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், கல்வி சார் - கல்வி சாரா ஊழியர் சங்கங்களின் பிரதிநிதிகள் என முழுப் பல்கலைக்கழக சமூகத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் சகல தரப்பினரும் இந்தசந்திப்பில் பங்குபற்றினர். அங்கு அவர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் சுருக்கம் பின்வருமாறு :-

### வரலாற்றுக் கால கட்டம்

ஈழத்தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்த வேண்டிய - வெளியே கொண்டுவர வேண்டிய - பகிரங்கப் படுத்த வேண்டிய ஒரு வரலாற்றுக் கால கட்டத்தில் நாம் இருக்கின்றோம்.

நீண்டகால அடக்குமுறை மற்றும் நெருக்குதல்களால் ஏற்பட்ட பீதி, பயம் காரணமாக மக்களில் பலர் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்த - தமது விருப்பம் இது தான் என்பதை யதார்த்த பூர்வமாக வெளியே எடுத்துக்கூற - இயலாத நிலையில் உள்ளனர்.

இன்னும் பலர் தற்போதைய ஆட்சி, அவல நிலைகள் காரணமாக அன்றாடப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் கஷ்டத்தில் மூழ்கியிருப்பதால் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தும் பொறுப்பிலிருந்து தள்ளி நிற்கின்றார்கள்.

இத்தகைய மக்களோடு நெருக்கமாய்ப் பழகி, மனம் விட்டுப் பேசி, அவர்கள் மனதில் அச்ச உணர்வைப் போக்கி, துணிவை உருவாக்கி அவர்களின் அபிலாஷை இது தான் என்பதை அவர்களின் அடிமனதிலிருந்து வெளிக்கொணர வைக்கும் ஒரு கலந்துரையாடல் பணியையே யாழ். பல்கலைக்கழக சமூகம் இப்போது முன்னெடுத்திருக்கின்றது.

நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து எங்களுடைய அபிலாஷை இது தான் என்பதை சர்வதேச சமூகத்தின் முன்னாலும் தென்னிலங்கை மக்கள் முன்னாலும் ஒரே குரலில் வைக்க வேண்டிய ஒரு வரலாற்றுப் பொறுப்பு இந்தக் காலகட்டத்தில் எம மீது சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த கால அனுபவங்களின் ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் நாம உணர்ந்து கொண்ட பாடம் என்ன?

எமது உடலுக்கும், உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பான ஒரு வாழ்க்கை முறை - ஒரு நிறுவன ரீதியான ஓர் அமைப்பு முறை- எங்களுக்கு அத்தியாவசியம். இதை எட்டுவதுதான் எமது அபிலாஷைகளின் நோக்கம். வெறும் வாக்குறுதிகளும் சட்டங்களும் இந்த அபிலாஷைகளை நிறைவு செய்துவிட மாட்டா.

### கையறு நிலையில்

பல்வேறு அவலங்களைச் சந்தித்திருக்கும் நாம் இன்று கையறு நிலைக்கு வந்து நிற்கின்றோம்.

ஒற்றையாட்சியின் கீழ், ஒரு நாட்டு அரசமைப்பின் கீழ் எமக்கு நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும் என்ற நம்பிக்கை என்றோ பொய்த்துவிட்டது.

இந்த அனுபவங்களில் இருந்தும் -

சர்வதேச அரசியலில் - சர்வதேச சமூகத்தில் தேசிய இனப்பிரச்சினைகளில் காணப்பட்ட தீர்வுகளின அறிவார்ந்த அனுபவங்களில் இருந்தும்-

நாம் ஒரு முடிவுக்கு வந்துள்ளோம் .

ஒரு நாட்டு அரசமைப்பில்- ஒற்றையாட்சி அமைப்பில் - எமக்குத் தீர்வு கிடைக்காது என்று நாம் கூறுவதால் நாம் பிரிவினை கேட்பதாக யாரும் கருதிவிடக் கூடாது.

நாங்கள் ஒரு தேசிய இனம், எங்களுக்கென ஒரு மரபு வழித் தாயகம் உண்டு. இதன் அடிப்படையில் எமது சுயநிர்ணய உரிமையை பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கும் இலங்கை அரசு அங்கீகரிப்பதன் மூலம் இரு இன மக்களும்- தமிழ் இன மக்களும் சிங்கள இன மக்களும்- சரிநிகர் சமானமாக இந்தத் தீவில் வசிக்கமுடியும்.

எமது தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமே எமது உயிருக்கு, உடைமைக்கு, தனித்துவத்துக்கு பாதுகாப்புக் கிடைக்கமுடியும் என நாம் கருதுகின்றோம்.

### சுயநிர்ணய உரிமையே உயிர் மூச்சு

எமக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அதை ஏற்று அங்கீகரிக்க வேண்டிய கடப்பாடு தென்னிலங்கை மக்களுக்கு உள்ளது.

அதை அங்கீகரிப்பதன் மூலம் நாம் தனியாகப் பிரிந்து சென்றுவிடுவோம் என்று எடுத்த மாத்திரத்திலேயே அவர்கள் கருதத் தேவையில்லை.

எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அதன் கீழ் நாம் கூட்டாக வாழ்வதற்கான - தமிழர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியமான திட்டத்தை முன்வைக்கவேண்டியது தென்னிலங்கை அரசினதும் மக்களினதும் பொறுப்பு.

எங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு; அதை அங்கீகரியுங்கள் என்ற எதிர் பார்ப்பே தமிழ் மக்களின் அடிமனதில் கனன்று கொண்டிருக்கும் அபிலாசை; உயிர் மூச்சு.

இதை வெளிப்படுத்தும் இலட்சிய நோக்கையே நாம் செயல்படுத்துகின்றோம்.

அடுத்தது அந்த அபிலாசையின் அடிப்படையில் அதனை எட்டுவது.

### புனித நோக்கு

ஆனால் ஒட்டுமொத்தமாகத் தமிழ் சமுதாயத்தின் அபிலாஷை சுயநிர்ணய உரிமை ஒன்றே என்பதை ஒரே குரலில் வெளிப்படுத்தி பகிரங்கப்படுத்தும் ஒரு செயலை மட்டுமே புனித நோக்காகக் கொண்டு நாம் செயற்படுகின்றோம்.

எமது இந்தச் செயற்பாடு அரசியல் கட்சிகளின் - இயக்கங்களின் - கலப்பற்றது; அரசியல் பின்னணியற்றது; சுயாதீனமானது; கட்சி சாராதது.

### பொங்கு தமிழ

பொது அமைப்புக்களையும் பொது மக்களையும் ஒன்று திரட்டி அவர்களின அபிலாஷையை ஒரே குரலில் முரசறையும் எமது முயற்சிக்கு பொது மக்களின் ஒத்துழைப்பை முழுப் பங்களிப்பைக் கோருகின்றோம்.

எமது இந்த நன்முயற்சிக்கு யாரும அரசியல் சாயம் பூசவேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தமிழ் மக்களின் மனதில் மறைந்து இருக்கும் அபிலாஷை இதுதான் என்பதை நாம் வெளிக்கொணரும் போது அது பொங்கு தமிழாக வெளிப படும். அதை உலகுக்கு - சர்வதேச சமூகத்திற்கு- எடுத்துக் காட்டுவதற்காக எமது மக்களின் அபிலாஷைகளை பகிரங்கமாக்கும் 'பொங்கு தமிழ்' என்ற நிகழ்வை நாம் விரைவில் ஒழுங்குபடுத்துவோம்.

அதில் பங்குபற்றி ஒட்டுமொத்தமாக மக்களின் குரலை ஒரே மூச்சில் ஒலிக்கத் தயாராகுமாறு எமது மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம் - என்று கூறப்பட்டது.


## விசேட பொதுக் கூட்டம்

உடுப்பிட்டி இலக்கணாவத்தை கற்பக விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையின் விசேட பொதுக் கூட்டம் நாளை (07.01.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் கலந்து கொள்ளவும்.

(C/14667) - ஆலய பரிபாலன சபை.



## ஆட்டிறைச்சிக் கடை திறப்பு

ஆரியகுளம் சந்தி பாரத் உணவகத்துக்கு முன்பாக ஆட்டிறைச்சிக் கடை ஒன்று இன்று (06.01.2001) சனிக்கிழமை திறக்கப்படுகின்றது.

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். சிறந்த முறையில் சுத்தம் செய்து கொடுக்கப்படும்.

சி.உஷாந்
யாழ்ப்பாணம். (82604) உரிமையாளர்



## நன்றி நவில்கின்றோம்

யாழ். பிரதேசத்தில் கடற்றொழில் தடையினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தொழில் இழப்பு நிவாரணமாக ஒரு தொகைப் பணத்தை ஒதுக்கீடு செய்து, குடும்பத்திற்கு 1500 ரூபா வீதம் நிவாரணம் பெற்றுத் தந்தமைக்காக கடற்றொழிலாளர் சார்பில்

வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி மற்றும்
வடக்கு - கிழக்கு தமிழ்மொழி அலுவலகள் விவகாரம் மற்றும்
இந்து கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக்
கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்
மற்றும் அவரோடு இணைந்த நாடாளுமன்ற
உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

இவ்வகையில் அவர் மேலும் எமது பாதிப்புற்ற மீனவர்களுக்கு தொடர்சேவை செய்வதற்கு நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

-குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம். (82612)



## வாழ்த்தும் நன்றியும்

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக மீண்டும்
நியமனம் பெற்ற

**உயர்திரு. மு.பாக்கியநாதன் B.A.**

அவர்களை வாழ்த்துவதுடன் இந்நியமனத்தை வழங்கிய
வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனர்நிர்மாண தமிழ்
விவகார இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு
நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

வதிரி தமிழ் மன்றம்,
வதிரி டயமன்ட்
விளையாட்டுக் கழகம்,
அல்வாய். வட்டுவத்தை சனசமூக நிலையம்.

(C/14666)


## மரண அறிவித்தல

### கணபதிப்பிள்ளை வயிரன்

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை வயிரன் நேற்று (05.01.2001) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் திரு.திருமதி கணபதிப்பிளை தம்பதிகளின் அன்பு மகனும் சின்னப்பிள்ளையின் அருமைக் கணவனும் திருமதி கந்தையா தங்கமணி, திருமதி செல்லத்துரை சிவலோகநாயகி, கணநாதன் திருமதி தவராசா, அன்னயோகம், இராமச்சந்திரன், அமரர் கணேசலிங்கம், அமிர்தலிங்கம் (சுவிஸ்), செல்வி மேனகியம்மாள் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் கந்தையா, செல்லத்துரை செல்வராசம், செல்வமணி, தவராசா (அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி), திருமதி கணேசலிங்கம் (கொழும்பு), திருமதி அமிர்தலிங்கம் (ரஜனி-சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2001) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வதிரி ஆலங்கட்டை மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்போதைய முகவரி :
*C/O கி.பரமதாஸ்,*
*'அன்னதாரகை,'*
*மாலுசந்தி.*

தகவல்:
நா.தவராசா
(மருமகன்)

(C/14668)

# பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியராக 57 பேருக்கு நியமனம் கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஜன-6

யாழ்.மாவட்டத்தில் 57 பேருக்கு பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்நியமனக்கடிதங்கள் நேற்று யாழ்.கல்வி வலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தென்மராட்சியில் 5 பேரும், வடமராட்சியில் 4 பேரும் வலிகாமத்தில் 8 பேரும் தீவகத்தில் 17 பேரும் யாழ்ப்பாணத்தில் 22 பேரும் கிளிநொச்சியில் ஒருவருமாக 57 பேருக்கு இந்த நியமனங்கள் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் நியமனம் கிடைத்தவர்களின் விவரங்களை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வலயஅலுவலகத்தில பார் வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நியமனம் செய்யப்பட்ட குசலபன் சுபேந்திரன் (தொல்புரம் கிழக்கு) என்பவரின் நியமனக் கடிதம் யாழ்.கல்வி வலயத்தில் உள்ளது. (ஐ-5)

## வி.கழகங்களுடன் கலந்துரையாடல்

வலி. வடக்கு- ஜன.6

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கிற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் தலைவர் கப்டன் என்சோமசுந்தரம் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அங்கத்துவக் கழகங்களின் பிரதிநிதிகளின் மற்றும் செயற்குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளும்படி செயலாளர் கேட்டுள்ளார்.

இவ்வாண்டுக்கான சுற்றுப் போட்டிகள் மற்றும் பயிற்சிப் பாசறை பற்றி அங்கு ஆராயப்படவுள்ளது. (ஐ-86)

# கோழித் தீவனங்கள் உள்ளூரில் உற்பத்தி

அரியாலை,ஜன.6

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் கோழித் தீவனங்களை உற்பத்தி செய்து வருகின்றது.

ஐநா.அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினால் மேற்படி சங்கத்திற்கு வழங்கப்பட்ட இயந்திரங்கள் மூலம் குருணி ஆக்கப்பட்ட கோழித்தீவனங்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குஞ்சுத் தீவனம், வளர் குஞ்சுத் தீவனம், முட்டைக் கோழித்தீவனம், இறைச்சிக் கோழித்தீவனம், கோழி ஆரம்பத் தீவனம், இறைச்சிக் கோழி முடிவுத் தீவனம் போன்ற கோழிகளுக்கான தீவனங்கள் தயாரிக்கப்பட்டு வருவ தாக சங்க வட்டரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

# அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் இல்லை

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.செயலக அடையாள அட்டைப் பிரிவில் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்கள் முடிவடைந்து விட்டமையினால் யாழ். மாவட்டத்தில் இருந்து தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் முடிவடைந்தது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் இதுவரையும் கொழும்பிலிருந்து படிவங்கள் அனுப்பி வைக்கப்பட வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பல இளைஞர், யுவதிகளும் விண்ணப்பப் படிவங்கள் இல்லாத காரணத்தினால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளனர். (ஐ-5-6)

## பயணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி மக்களின் பயண ஏற்பாடுகள் இதுவரை வடமராட்சியிலேயே மேற்கொள்ளப்பட்டு பயணிகள் அங்கிருந்தே கப்பலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு வந்தனர். (ஐ-3-173)

## விஞ்ஞானபீட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளரும் விஞ்ஞான பீட மாணவனுமாகிய திவ்வியனின் முயற்சியால் இந்த இணக்க நிலை ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

இதன்படி ஷாஜகானை 'ராகிங்' எதிர்ப்பாளர் எனக்கூறி ஒதுக்கி வைப்பதில்லை என சிரேஷ்ட மாணவர்கள் ஷாஜகானுக்கு உறுதியளித்தனர். அதை சாஜகான் ஏற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் விஞ்ஞான பீடாதிபதிக்கும், துணைவேந்தருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து துணைவேந்தர் தலைமையில் பல்கலைக்கழக ஒழுக்காற்றுக் குழு சிரேஷ்ட மாணவப் பிரதிநிதிகளுடனும் மாணவன் ஷாஜகானுடனும் உரையாடி இனிமேல் அவர்கள் ஒற்றுமையாகச் செயற்படுவார்கள் என்ற உறுதி மொழியைப் பெற்றுக்கொண்டது.

மாணவர்களிடையே புரிந்துணர்வையும் சுமுக நிலையையும் ஏற்படுத்த நியமிக்கப்பட்ட விஞ்ஞானபீட உபகுழு நிலைமையை அவதானித்து வருவதாகவும்,சுமுகநிலை ஏற்பட்டு வருவதால் ஷாஜகான் மீதும் ஏனைய எழுபேர் மீதும் விதிக்கப்பட்ட தண்டனையை இரத்துச் செய்யுமாறு துணைவேந்தருக்கும் விரைவில பரிந்துரை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-6)



இலங்கைக் கடற்படையின் 14ஆவது தளபதியாக வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கடந்த செவ்வாயன்று உத்தியோக பூர்வமாக கொழும்பு கடற்படைத் தலைமையகத்தில் பதவியேற்றுக் கொண்டார். அச்சமயம் அவருக்குக் கடற்படையினரால் அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையை தளபதி பார்வையிடும் போது பிடிக்கப்பட்ட படம்.

# சுகாதாரப் பகுதியினரால் பழுதடைந்த அரிசி கண்டுபிடிப்பு

நெல்லியடி,ஜன.6

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பாவனைக்கு உதவாத அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பது குறித்து பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி யாழ். பிராந்திய உணவு மருந்துப் பரிசோதகருக்குத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நேற்று நண்பகல் திடீர் விஜயம் செய்த உணவு, மருந்துப் பரிசோதகர் பாவனைக்குதவாத அந்த அரிசியை பாவனையாளர்களுக்கு விநியோகிக்க வேண்டாம் என்று பொது முகாமையாளரைப் பணித்துள்ளார்.

உணவு மருந்து பரிசோதகருடன் துன்னாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோ, நெல்லியடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.பாலதேவா, உடுப்பிட்டி பொதுச் சுகாதாரப பரிசோதகர் க.நாகேந்திரம் ஆகியோர் உடன் சென்றிருந்தனர். (ஐ-109)

நிவாரணத்துக்கு வழங்கவென, உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத அரிசியை, பாவனையாளர்களுக்கு வழங்க வேண்டாம் என்று யாழ். மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் ரீ.மகாதேவா உத்தரவிட்டுள்ளார்.

## பேச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் ஆர்வமாக இருக்கின்றது. பேச்சில் விடுதலைப்புலிகளுக்கு நம்பிக்கை இருந்தால் திட்ட வட்டமான கொள்கையுடன் பேச்சுக்கு வர வேண்டும். பேச்சுக்களை ஆரம்பிக்க வேணடிய சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது. புலிகளும் பேச்சுக்குத் தயாரான சூழ்நிலையை உருவாக்க வேணடும். அவர்கள் அத்தகைய நிலை ஒன்றை உருவாக்காவிட்டால், எதிர்காலத்தில் அத்தகைய சூழ்நிலை ஒன்று உருவாகுவதை எதிர்பார்த்துக் காத்திருப்போம் - என்றார். (ஐ-3-6)

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதுவிடயமாக தமது அரசாங்கம் மூலம் நடவடிக்கை எடுப்பதாகத் தூதர் உறுதியளித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் மலையகக் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ-3)


சுடர் ஒளி

ஜனவரி 7 இதழ்

பேச்சு நடக்காது நடந்தாலும் தொடராது தொடர்ந்தாலும் பலன் தராது

லண்டனில் உள்ள அன்டன் பாலாவுடன் டெலிபோன் சம்பாஷணையில் கசிந்த யதார்த்தங்கள்

...க்கு, கிழக்கு, மலையக நிலைமைகள்

மற்றும் இருபக்க சினிமா உட்பட

வழமையான சுவை சொட்டும் அம்சங்கள்

(C/14689)

சில்லறை விலை: ரூபா17/=



அனுமதி அட்டை

புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்ப வைக்கப்பட்டுள்ளன.

முக்கிய குறிப்பு:

* அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் பரீட்சைத் தினத்தன்று (07.01.2001) நேரடியாகத் தம்மை உறுதிப் படுத்தும் ஆவணங்களுடன் யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகம் தரவும்

இயக்குநர், IIS

100. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C/14652)



நவீன கணனித் தொழில்நுட்ப அறிமுகங்களுடன் 2001ம் கல்வியாண்டிற்கான கணனிக்கற்கை நெறிகள் ஆரம்பம்

14-01-2001 காலை 11.00 மணி

| Course of Study | Duration |
|---|---|
| 1 Bachelor of Information Technology (BIT) | (3 Years) |
| 2 Advanced Diploma in Applied Computer Science | (1 Year) |
| 3 Diploma in Software Engineering | (1 Year) |
| 4 Diploma in Personal Computer Specialist | (8 Months) |
| 5 Diploma in Computer Programming | (8 Months) |
| 6 Technician Diploma in Computer Hardware | (6 Months) |
| 7 Diploma in Microsoft Office | (5 Months) |
| 8 Diploma in Internet Technology | (4 Months) |

மேற்படி கற்கைநெறிகளில் புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும்.

IIS "நவீன கணனித் தொழில் நுட்பங்களின் சங்கமம்" "உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

Institute of Informatics Studies



நாளை ஆரம்பம் 07.01.2001

A/L 2003

கலை, வர்த்தகப் பிரிவுகள்

இரு இடங்களில்

பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம்- 9.00 a.m. - இணுவில் - 8.00 a.m.

(82342)



இன்று ஆரம்பம்!

A/L 2003

(கலை, வர்த்தகப் பிரிவுகள்)

காலை 8.00 மணி

DMI யாழ்நகர்.

(81306)



நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்

A/L 2003 கலை, வர்த்தகப் பிரிவுகள்

| | |
|---|---|
| இ.நா. - திரு.சிவமகாலிங்கம் | கணக்கீடு - திரு.தவா |
| தமிழ் - திரு.லிங்கம் | வணிகக்கல்வி - திரு.முரளி |
| அளவையியல் -திரு.சயந்தன் | பொருளியல் - திரு.சண் |
| புவியியல் - திரு.வேலா | பொது வினா- திரு.சயந்தன், திரு.வேலா |
| நாடகம் அர. - பிரபல ஆசிரியர் | வரலாறு - பிரபல ஆசிரியர் |

(82183) ஆரம்பம்: நாளை 07.01.2001 காலை 8 மணி


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.